# ஊன்றுகோல்



சகோ. ராஜசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊன்றுகோல்

சகோ.ராஜசேகரம்

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | ஊன்றுகோல் |
| ஆசிரியர் | : | சகோ.ராஜசேகரம் |
| பக்கங்கள் | : | 75 |
| அளவு | : | A5 |
| பிரதிகள் | : | 500 |
| வெளியீடு | : | நவம்பர் 2017 |
| அட்டை வடிவமைப்பு | : | சு.நிர்மலவாசன் |
| கனணி வடிவமைப்பு | : | வணசிங்க பிரிண்டர்ஸ்,<br>திருமலைவீதி, மட்டக்களப்பு.<br>தொ.பே: 0652227170. |



| | | |
|---|---|---|
| தொடர்புகளுக்கு | : | Bro Maharishi (ராஜசேகரம்)<br>HOFSTEDE - 162<br>8212 WL<br>LELYSTAD<br>NEDERLAND.<br>T.P : 0031 320 227445<br>0031 622 728717 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டுப்போன என்னை
தன்பார்வைக்கு
சரியாய் கண்டபடி
என்னை
வனைந்தவருக்கு.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே ....

1. உலகங்களின் இரகசியம்

2. புத்திமானின் இரகசியம்

3. இயேசுவின் தெய்வீகத்தின் இரகசியம் - 1

4. புழுதியின் இரகசியம்

5. திருவிருந்தின் இரகசியம்

6. பரிசுத்தமாகுதலின் இரகசியம்

7. முத்திரிக்கப்பட்ட கைகளின் இரகசியம்

8. ஆவியின் இரகசியம் - பகுதி 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1

# உலகங்களின் இரகசியம்

### (அ) உலகங்களின் படைப்பு

மனிதன் வாழுவதற்காகவும், ஆளுவதற்காகவும் தேவன் ஒழுங்குபடுத்தித் தந்த **உலகங்கள்** பற்றி எபிரேயர் 1:2 இலும், எபிரேயர் 11:3 இலும் வாசிக்கலாம்.

❖ (இங்கு உலகம் அல்ல, **உலகங்கள்** என்பதாகும்.)

இந்த உலகங்கள் குமாரன் (இயேசு கிறிஸ்து) மூலமாய் உண்டாக்கப்பட்டது (எபி 1:2) என்றும்,

உலகங்கள் **தேவனுடைய வார்த்தையினால்** உண்டாக்கப்பட்டது (எபி. 11:3) என்றும் கூறும் போதும்,

குமாரனாகியவரே, தேவனுடைய வார்த்தையானவர் என்றும், அவர் மூலம் சகலமும் உண்டாக்கப்பட்டது என்பது,

**வார்த்தை மூலமே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது** என்னும் அடிப்படைச் சத்தியத்தை உணர வேண்டும்.

(சங்கீதம் 33:6) (கொலோசியர் 1:16) (நீதிமொழிகள் 8:22) ஏனெனில், இவ்வடிப்படைச் சத்தியத்தை தவறாகப் புரிந்து கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும், அவரே சிருஷ்டிகளுள் முதல் படைப்பு என்றும், அவரைக் கொண்டே ஏனைய சிருஷ்டிகள் உண்டாக்கப்பட்டது என்று வாதாடும் பிரிவினர் உண்டு.
*(கொலோசியர் 1:15)* *(வெளி 3:14)*

**அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்** (கொலோசியர் 1:17) என்ற பாதி வசனத்தைக் காட்டும் இவர்கள் மீதி வசனமாகிய **எல்லாம் அவருக்குள் நிலை நிற்கின்றது** என்பதற்கு விளக்கம் தருவதில்லை.

வார்த்தையே சிருஷ்டிகளுக்கு ஆதி. வார்த்தையின் மூலமே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. வார்த்தையின் மூலமே சகல சிருஷ்டிகளுக்குள்ளும் இயக்கம் நடைபெறுகின்றது.
*(கொலோசியர் 1:17)* *(எபிரேயர் 1:3)* *(சங்கீதம் 103:22)*

- ஆதியிலே **வார்த்தை இருந்தது**. (யோவான் 1:1)
- அந்த வார்த்தை தேவனாயிருந்தது.
- ஆதியிலே **தேவன்** வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். *(ஆதி 1:1)*
- வார்த்தையே கிரியைகளுக்கு **வழி**. *(நீதி 8:22)*
- அவரே பூமியை **தம்முடைய வல்லமையால்** படைத்து. *(எரேமியா 10:12)*
- அவரே பூச்சக்கரத்தை **தமது ஞானத்தினால்** படைத்து. *(எரேமியா 51:15)*
- அவர் **தமது ஆவியினால்** வானத்தை அலங்கரித்தார். *(யோபு 26:13)*
- உமது **விரல்களின்** கிரியையாகிய வானங்கள். *(சங்கீதம் 8:3)*
- வானங்கள் **உமது கரத்தின்** கிரியையாயிருக்கிறது. *(சங்கீதம் 102:25)*

சிருஷ்டிப்புடன் தொடர்புடைய இவ்வேத வசனங்களானது,
- வார்த்தையே **தேவன்**
- வார்த்தையே **தேவ வழி**
- வார்த்தையே **தேவ வல்லமை**
- வார்த்தையே **தேவ ஞானம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வார்த்தையே தேவ **ஆவி**
- வார்த்தையே தேவ **விரல்கள்**
- வார்த்தையே **தேவகரம்**

என்னும் ஆழமான சத்தியத்திற்குள் நம்மை உணர்வடையச் செய்வதை உணரலாம்.

வார்த்தை மாமிசமாக வெளிப்பட்டது (யோவான் 1:14) தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டார். (1 திமோத்தேயு 3:16) என்னும் வேத வாக்கியங்களின் தேவ பக்திக்குரிய இரகசியங்களையும் அறிந்து கொள்ளலாம்.

## (ஆ) இங்கு உலகங்கள் என்னும் போது.

- ஆகாய மண்டலமாகிய **வானம்**
- மண் மண்டலமாகிய **பூமி**
- சமுத்திர மண்டலமாகிய **தண்ணீர்** என்பவற்றைக் குறிக்கும்.

மண்டலம் - வட்டம் - உருண்டை - சக்கரம்.... என்பவை பூரணம் என்பதன் **குறியீடு** ஆகும்.

உருளுவதால் உருண்டை என்றும், (சுழலுதல்)
தொடங்கிய இடத்தில் முடிவதால் வட்டம் என்றும்,
வட்டமாய் இருப்பதால் மண்டலம் என்றும் அர்த்தமுண்டு.

உருண்டையாய் இருப்பதால் சூரியன், சந்திரன், பூமி, கோள்கள்... போன்றவை சுழலுகின்றன. சுழலுவதனால் சக்தி உண்டாகின்றது. வெப்பம் உண்டாகின்றது.

தேவனானவர் **பரமண்டலங்களில்** (மத்தேயு 6:9) வீற்றிருப்பதைப் போன்றும் **பரமண்டலங்களின் சக்கரத்தில்** (யோபு 22:14) இயங்குவதைப் போன்றுமான அமைப்பு இவ்வுலகங்களுக்குள் ஏற்படுத்தியிருப்பதை அறியும் போதுதான் ஆச்சரியம் உண்டாகும்.
ஆதாரம் : தானியேல் 7:9, எசேக்கியேல் 1:16-22, எசேக்கியேல் 10: 9-13

❖ **பரமண்டலம்... அல்ல, பரமண்டலங்கள்** என்பதும் இரகசியம்.
ஆதாரம் : யோபு 22:14 மத்தேயு 6:9 வெளிப்படுத்தல் 12:12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விதை - மரம் - கனி - விதை
- நீர் - மேகம் - மழை - நீர் (நீர்வட்டம்) யோபு 26:10 எரேமியா 51:15-16
- குழந்தை - மனிதன் - முதிர்வு - குழந்தை (வாழ்க்கை வட்டம்)
- பிரசங்கி 1:4-7ல் சந்ததி - சூரியன் - காற்று - நதி என்பவற்றைக் குறித்து காணலாம்.

எல்லாம் அவருக்குள் நிலை நிற்கின்றது. (கொலோசியர் 1:17) என்பதன் அர்த்தம் இதுவே. அவருக்குள் என்பது வார்த்தைக்குள் என்பதே சத்தியம்.

**(இ)** *1)* **உலகங்களும் - உயிர்களும்**

- ❖ வான மண்டலம் - பறவைகள்
- ❖ மண் மண்டலம் - மிருகங்கள், ஊர்வன, உயிருள்ளவை...
- ❖ சமுத்திர மண்டலம் - நீந்துவன, சமுத்திரத்து மச்சங்கள்

ஆதாரம் - (ஆதி 1:26)

*2)* **உலகங்களும் - ஆசீர்வாதங்களும்**

- ❖ வான மண்டலம் - காற்று, இரவு, பகல், சூரியன், சந்திரன், மழை, பனி.....
- ❖ மண் மண்டலம் - உணவிற்கான ஆதாரங்கள், மரம், கனி, தாவரம், கனிமம், எண்ணெய்....
- ❖ சமுத்திர மண்டலம் - நீர் வளம், மீன், உப்பு, கனிமம்....

ஆதாரம் : ஆதி 49:25, உபாகமம் 33: 14-16, யோபு 28: 1-6, சங்கீதம் 104: 14-20

தேவன் நமக்களித்திருக்கும் இவ்வளங்களை நாம் எண்ணிப்பார்ப்பதில்லை. நம்முடைய வாழ்வாதாரத்தின் அத்தியாவசியங்கள் கண்களுக்குப் புலப் படாமலும், சிந்தனைக்குத் தெரியப்படாமலும் இருப்பதனால், நாம் ஆசீர்வா தங்கள் என்றவுடன் சிந்தையை மாயைகளுக்கு நேராகத் திருப்புகிறோம்.

*3)* **உலகங்களும் - மனிதனும்**

- ❖ வான மண்டலம் - காற்று (வார்த்தை காற்றைப் போன்றது) ஆவி
- ❖ மண் மண்டலம் - மண் (சரீரம்)
- ❖ சமுத்திர மண்டலம் - தண்ணீர் (ஆத்துமா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மண்ணும் - தண்ணீரும் - காற்றும் கலந்த கலவையாக உண்டாக்கப்பட்டான். அவைகள் ஆவி - ஆத்துமா - சரீரத்தின் அடையாளங்களாகவும், அவைகள் உடலிலே சுத்திகரிக்கப்படுவதைப் போன்று நம்முடைய ஆவி - ஆத்துமா - சரீரம் சுத்திகரிக்கப்பட வேண்டும். என்ற நியமமுடைய அடையாளங்களைக் கொண்டிருக்கின்றன.

❖ **"நீர்க்கால்கள்"** நூலில் **மனித சிருஷ்டிப்பின் இரகசியம்** என்னும் பகுதியில் மேலதிக இரகசியங்களைப் பார்க்கவும்.

**4) உலகங்களும் - உடன்படிக்கைகளும்**

❖ மண் மண்டலம் - ஆதாம் : (மண்ணிலிருந்து உண்டானவன்)
❖ சமுத்திர மண்டலம் - மோசே : (ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன்)
❖ காற்று மண்டலம் - இயேசு : (வார்த்தையானது காற்றுக்கு ஒப்பானது) - (யோபு 8:2, யோபு 16:3)

மண் - ஆதாம் - மனச்சாட்சியின் உடன்படிக்கை
தண்ணீர் - மோசே - நியாயப்பிரமாண உடன்படிக்கை
காற்று - இயேசு - புதிய உடன்படிக்கை

❖ "நீர்க்கால்கள்" நூலில் மனித சிருஷ்டிப்பின் இரகசியம்" பகுதி (ஈ) ஐப் பார்க்கவும்

ஆகவே, கிறிஸ்தவர்களுக்கு **இன்னொரு சுவிஷேசம் இல்லை** என்ற பவுலின் கூற்றின் உண்மையை உணர முடியும்.

**5) உலகங்களும் - கடைசிக்கால அடையாளங்களும்**

❖ வான மண்டலம் : சூரியன், சந்திரன், நட்சத்திரங்களில் அந்தகாரம்.
❖ மண் மண்டலம் : பூமியதிர்ச்சி, மலைகள் அகன்று போகும்
❖ சமுத்திர மண்டலம் : சமுத்திரம் இரத்தமாகும், சமுத்திரத்தில் சேதமுண்டாகும்.

ஆதாரம் : மத்தேயு 24:29, மத்தேயு 24:35, லூக்கா 21:11, லூக்கா 21:25-26, வெளிப்படுத்தல் 6:12, வெளி 6:14, வெளி 7:3, வெளி 8:5, வெளி 8:8.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) **உலகங்களும் - உபத்திரவ காலமும்**

❖ வான மண்டலம் - வலுசர்ப்பமும், அதைச் சேர்ந்த தூதர்களும்

❖ மண் மண்டலம் - இருகொம்புள்ள ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான மிருகம்

❖ சமுத்திர மண்டலம் - ஏழுதலையும், பத்துக் கொம்புமுள்ள மிருகம். ஆதாரம் : வெளிப்படுத்தல் 12:7-9, வெளி 13:11, வெளி 13:1

உபத்திரவ, மகா உபத்திரவ காலத்தில் வெளிப்படும் காரியங்களுடன் உலகங்கள் எவ்வாறு தொடர்புள்ளது என்பதை நாம் இன்னும் ஆராயும் போது இன்னும் ஆழமானதும், மறைவானதுமான காரியங்களும் வெளிப்படும்.

7) **உலகங்களும் - கீழ்ப்படிதலும்**

❖ வான மண்டலம் - வானோர்

❖ மண் மண்டலம் - பூதலத்தோர்

❖ சமுத்திர மண்டலம் - பூமியின் கீழானோர்

ஆதாரம் : பிலிப்பியர் 2:10 ரோமர் 14:11 ஏசாயா 45:23

❖ இங்கு **வானோர்** என்பது **தேவனுடைய தூதர்கள் அல்ல.** ஏனெனில் தேவனுடைய தூதர்கள் எப்பொழுதும் துதித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய ஆலயம் துதிகளினால் நிரம்பியிருக்கிறது. ஆகவே, இங்கு முழங்காற்படியிட வேண்டிய வானோர் என்பது அந்தகார லோகாதிபதிகளும், வான மண்டலத்துப் பொல்லாத ஆவிகளுடைய சேனைகளுமாகும்.

ஆதாரம் : லூக்கா 10:18 1 கொரிந்தியர் 8:5 எபேசியர் 6:12

❖ பூதலத்தோர் என்பது பூமியிலுள்ள தேவர்களைக் குறிக்கும். (தேவன் அல்ல....)

ஆதாரம் : 1 கொரிந்தியர் 8:5, செப்பனியா 2:11

இவைகள் **விக்கிரகங்களுக்குள்** இருந்து கிரியை நடப்பிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் விக்கிரகங்களுக்கு நியாயத் தீர்ப்பு உண்டு என்று வேதாகமம் சொல்லுகின்றது.

ஆதாரம் : ஏரேமியா *10:14-15* ஏரேமியா *51:18* ஆபகூக் 2:18

❖ பூமியின் கீழானோர் என்பது தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள்.

ஆதாரம் : யூதா 6, வெளிப்படுத்தல் *9:14*

## (ஈ) உலகம் - பிரபஞ்சம்

(1) ஆதாம் உடன்படிக்கையை மீறியபொழுது சாத்தானின் அதிகாரத்திற்கு உட்பட்ட உலகமாகும்.
பரிசுத்த வேதாகமமும் இவ் உலகத்தைக் குறித்தே நம்மை எச்சரிக்கை செய்கிறது. பொல்லாங்கனுக்குள் கிடக்கும். (1 யோவான் 5:19) இவ்வுலகமானது இச்சைகளினால் நம்மை மயக்கும் உலகமாகும். இது தேவனிடம் இருந்து நம்மைப் பிரித்து, நம் மனதைக் குருடாக்கும் வஞ்சகமாகும்.

இந்த **மாய உலகத்தின் உருண்டைக்குள்ளே** ஒரு அமைப்புண்டு.

- உலகத்தின் **அதிபதி** (யோவான் 12:31) (யோவான் 14:30) (யோவான் 16:11)
- உலகத்தின் **ஞானம்** (1கொரிந்தியர் 3:19) (1 கொரிந்தியர் 1:21)
- உலகத்தின் **ஆவி** (1 கொரிந்தியர் 2:12)
- உலகத்தின் **வேஷம்** (1 கொரிந்தியர் 7:31)
- உலகத்தின் **அசுத்தம்** (2 பேதுரு 2:20)
- உலகத்தின் **கறை** (யாக்கோபு 1:27)
- உலகத்தின் **கவலை** (மாற்கு 4:18)

தனிப்பட்ட வாழ்வில் ஒவ்வொரு தேவ பிள்ளையும், தேவனுடைய சபை களும் விழித்துக் கொள்ள வேண்டிய மிகப் பெரிய சத்தியமாகும்.சபை யென்பது உலக ஞானத்தில் அல்ல, தேவ ஞானத்திலே நடத்தப்பட வேண்டும் சபையின் விழாக்களானாலும் சரி, ஊழியர் தெரிவானாலும் சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவனுடைய வீட்டிலே நியாயத் தீர்ப்பு தொடங்கும்** என்பதே எச்சரிப்பின் சத்தம்.

(2) இவ்வுலகத்தைப் பிரபஞ்சம் என்றும் நமக்கு வேதாகமம் அடையாளம் காட்டுகின்றது. இந்தப் பிரபஞ்சத்திற்கும் ஒரு அமைப்புண்டு.

- பிரபஞ்சத்தின் **தேவன்** (2 கொரிந்தியர் 4:4)
- பிரபஞ்சத்தின் **லோகாதிபதிகள்** (எபேசியர் 6:12)
- பிரபஞ்சத்து **ஞானம்** (1 கொரிந்தியர் 2:6)
- பிரபஞ்சத்துக் **கவலை** (லூக்கா 8:14)
- பிரபஞ்சத்து **ஆசை** (2 திமோத்தேயு 4:10)
- பிரபஞ்சத்து **ஒத்தவேஷம்** (ரோமர் 12:2)

**இப் பிரபஞ்சத்தின் ஆசையினால்** பிரிந்து போன **தேமாவைக்** குறித்த பதிவுகள் நமக்கு எச்சரிப்பின் செய்திகளாகும்.

- பவுலுடனே கூட இருந்தவன்.
- பவுலுடனே கூட சபைகளை வாழ்த்தியவன்
- பவுலுடனே கூட பாடுகளை அனுபவித்தவன்.

(ஆதாரம் : கொலோசியர் 4:14, பிலமோன் 24, 2 திமோத்தேயு 4:10)

பிரபஞ்சத்தின் ஆசையால் பிரிந்து போன தேமாவின் செய்தி, **நமக்கும் போராட்டம் உண்டு என்று உணர்த்துகின்றது.**

நமக்குள்ளே இச்சைகளை உண்டு பண்ணும் இக்காரியங்கள் உலகத்திலிருந்து உண்டானவைகள் என்றே வேதம் நமக்குக் கூறுகின்றது.

*(3) 1 யோவான் 2:15-16ல்*

(2:15) உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

(2:16) ஏனெனில் **மாமிசத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய** உலகத்திலுண்டானவைகளெல்லாம், பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்திலுண்டானவைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **மாமிசத்தின் இச்சை**
- **கண்களின் இச்சை**
- **ஜீவனத்தின் பெருமை** ஆகிய இம்மூன்றும் நமக்கு சோதனையை உண்டு பண்ணும் கண்ணிகளாகும்.

இதே சோதனையினாலே, முந்தின ஆதாம் வீழ்ந்தான், பிந்திய ஆதாம் ஜெயித்தார். பிந்திய ஆதாமாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் இதே சோதனைதான். (மத்தேயு 4ம் அதிகாரம், லூக்கா 4ம் அதிகாரம்.)

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் ஆட்டுக்குட்டியானவர் நமக்கு முன்மாதிரியை வைத்துப் போனார்.

- ❖ **இயேசுவின் வார்த்தையே வழி!**
- ❖ **இயேசுவின் வார்த்தையே தீபம்!**
- ❖ **இயேசுவின் வார்த்தையே வெளிச்சம்!**

**(4)**
- **மாமிசத்தின் இச்சை - சரீரத்தில்** (கிரியையில்)
- **கண்களின் இச்சை - ஆத்துமாவில்** (எண்ணம் - யோசனை) *(உபாகமம் 28:34) (பிரசங்கி 1:8) (மாற்கு 7:23)*
- **ஜீவனத்தின் பெருமை - ஆவியில்** (வார்த்தையில்) *(சங்கீதம் 94:4) (எசே 35:13) (தானியேல் 7:8) (யாக்கோபு 3:14) (வெளி 13:5)*

❖ **(நீர்க்கால்கள்** நூலின் **ஆவி - ஆத்துமா - சரீரத்தின் இரகசியம்** என்ற கட்டுரையில் மேலதிக இரகசியங்களை வாசிக்கலாம்)

- ஆவி - ஆத்துமா - சரீரத்தை வஞ்சிக்கும் காரியங்களை பகுத்தறிவோம்!
- சபையைக் கெடுக்கும் செத்த ஈக்களை விலக்குவோம்!!
- உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்பதை உணருவோம்!!!

**"வேதத்திற்கு செவியை விலக்கும் ஜெபமும் அருவருப்பு"**

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

②

# புத்திமானின் இரகசியம்

(மத்தேயு நூலின் 7ம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது.)

✠ மலைச் சொற்பொழிவைச் சேர்ந்த இவ்வேதப்பகுதியிலே புத்தியுள்ள மனுஷனைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டிய ஆழமான சத்தியங்கள் உண்டு.

மத்தேயு 7:24ல்

i) நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு,

ii) இவைகளின்படி செய்கிறவன் எவனோ? - என்பதில்

இயேசு சொல்லிய இந்த வார்த்தைகள் என்ன என்பதே நாம் ஆராய வேண்டிய **சாவி வார்த்தையாகும்.**

**இந்த வார்தைகள்** என்பதற்குள் அடங்கியுள்ள **ஏழு காரியங்களையும்** நாம் கண்டறியலாம்.

இக்காரியங்கள் **தனி மனிதவாழ்வில்** கடைபிடிக்க வேண்டியது அல்லது சீர்ப்பட வேண்டியகாரியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மத்தேயு 7ம் அதிகாரத்தின் சீர்ப்பட வேண்டிய 7 காரியங்கள்

| | |
|---|---|
| ❖ **உன்னைச்சீர்படுத்து** | (7:1-5) |
| ❖ **தேவனிடத்தில் கேள்** | (7:7-12) |
| ❖ **வழியைத் தெரிந்துகொள்** | (7:13-14) |
| ❖ **எச்சரிக்கையாயிரு** | (7:15-20) |
| ❖ **தேவசித்தம் செய்** | (7:21) |
| ❖ **அஸ்திபாரம் போடு** | (7:24-27) |
| ❖ **போதனையில் நிலைத்திரு** | (7:28-29) |

(**நம்மைச் சீர்படுத்தாத கிறிஸ்தவ வாழ்க்கையும்,** தேவனைச் சார்ந்தி ராத நன்மையும், உலகத்தில் பிரித்தெடுக்கப்படாத வாழ்க்கையும், எச்சரிக்கையில்லாமல் வீழ்ந்து போனவர்களையும், **தேவசித்தம் தெரியாத ஊழியங்களையும், வேதத்தின் அஸ்திபாரம் இல்லாத தேவசபைகள்** பலவற்றையும் இக்காரியங்கள் நினைப் பூட்டுகின்றன.)

❖❖ கன்மலையாகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குள்ளும், வேத உபதேசங்களின் மேலும் எழும்பும் சபைகளே சோதனைகளை ஜெயிக்கும் சபைகளாயும்,
விசுவாசிகளின் விசுவாசத்தைப் பலப்படுத்தி ஆயத்தப்படுத்தவும் முடியும்.

❖❖❖ **சோதனைகள்** என்பது புத்தியுள்ள மனுஷனுக்கும், புத்தியில்லாத மனுஷனுக்கும் **ஒரே விதமாகவே** சம்பவிப்பதை இங்கு காணலாம்

✠✠ மத்தேயு 7:21 இன் மூல உபதேசமே **"தேவசித்தம் செய்"** என்பதாகும். ஏனெனில் நம்முடைய இரட்சிப்பைக் குறித்து சரியான சத்தியம் தெரியாததினால் தேவ சித்தம் குறித்து உணர முடியவில்லை என்பதே உண்மையாகும்.

(i) கடந்த காலப்பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் அடிப்படையில் அல்ல. இயேசு கிறிஸ்துவின் **மரணம் - அடக்கம் - உயிர்த்தெழுதல்** என்னும் மூல உபதேசத்தின் அடிப்படையிலே என்ற உண்மையை முதலில் உணர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சிலுவையைப் பற்றிய உபதேசமே சுவிஷேசம்**
- **சிலுவையைப் பற்றிய உபதேசமே தேவ செய்தி**
- **சிலுவையைப் பற்றிய உபதேசமே தேவபெலன்**

சபைகளில் திருவிருந்தின் ஆராதனையின் கட்டளையும் இதன் அடிப்படையிலேயே கட்டளையிடப்பட்டது.

(ii) கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நாம் **நிகழ்காலத்தின் இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வேண்டியவர்** என்ற உண்மையையும் நாம் உணரவேண்டும்.

அப்போதுதான் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட முடியும். இதனையே முடிவு பரியந்தம் நிலைத்திருத்தல் (மத்தேயு 24:13) (மாற்கு 13:13) என்றும்,

கிறிஸ்துவும் தமக்காகக் **காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி,** இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் என்று (எபிரேயர் 9:28) (ஏசாயா 11:11) வேத வாக்கியங்கள் சாட்சியிடுகின்றன. ஆகவே, வருகையில் எடுத்துக் கொள்ளப்படவோ, பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கோ **தேவசித்தம்** செய்வது நமது கடமையாகும்.

**மத்தேயு 7:21** இல் **தேவசித்தம்** செய்யும் போதுதான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்பதைக் காணலாம்,

**மத்தேயு 6:10** இல் இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்த ஜெபமும் இதுவேயாகும்.

- தேவசித்தம் என்பது தேவனுடைய திரு உள்ளத்தின் விருப்பம் ஆகும். (அப் 22:14)
- தேவனுடையசித்தத்தை அறிகின்ற அறிவினால் நிரப்பப்பட வேண்டும் என்பது வேத ஆலோசனையாகும். (கொலோ 1:9) (1 திமோ 2:4) (கொலோசியர் 4:12)
- தேவசித்தம் இன்னதென்று உணராதவன் மதியற்றவன். (எபே 5:17) என்ற எச்சரிப்பும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இப்பிரபஞ்சத்திலிருந்து நம்மை விடுவிப்பது **தேவசித்தம்.** (கலா 1:4)
2. நாம் **பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும்** என்பது தேவசித்தம். (1தெச 4:3)
3. **எல்லாமனுஷரும் சத்தியத்தை அறியும் அறிவை** அடைவது தேவசித்தம். (1திமோ 2:4)
4. **பூரணராகும்படி** கடந்து போதல் தேவசித்தம். (எபி 6:2-3)
5. **மனுஷருடைய இச்சைகளின்படி** பிழைக்காமல் இருப்பது தேவசித்தம். (1பேதுரு 4:2)
6. **நன்மை செய்து பாடனுபவிப்பது தேவசித்தம்.** (1பேதுரு 3:17)
7. **எல்லாமனுஷரும்** இரட்சிக்கப்படுவது **தேவசித்தம்.** (1திமோ 2:4)

**"தேவசித்தம் செய்பவனுடைய ஜெபம் கேட்கப்படும்"**
(யோவான் 9:31) (1 யோவான் 5:14)

✠✠✠ **சோதனைகள்** (மத்தேயு 7:25-27)

i) புத்தியுள்ள மனுஷனுக்கும், புத்தியில்லாத மனுஷனுக்கும் **ஒரேவிதமான சோதனைகள்** ஏற்படுவதையே இங்கு காணலாம்.

ii) **சோதனைகள்** மூலமே புத்தியுள்ள மனுஷனுக்கும், புத்தியில்லாத மனுஷனுக்கும் வேறுபாட்டை அறியலாம்.

iii) **சோதனைகளே** நம்மையாரென்று வெளிப்படுத்தும் காரணிகளாகும்.

❖ **பெருமழை, பெருவெள்ளம், காற்று** என்னும் மூன்று சோதனைகளும் உவமைகளாக சொல்லப்பட்டுள்ளன.

❖❖ **இம்மூன்று சோதனைகளும்** மனிதனது சரீரம் - ஆத்துமா - ஆவி (வார்த்தை) என்னும் மூன்றிலும் தாக்கத்தை உண்டாக்குபவை என்னும் **ஆவிக்குரிய அர்த்தத்தையும்** உடையவை.

### ✠ பெருமழை

பெருமழை என்பது மனிதனுக்கு சரீரப்பிரகாரமாய் ஏற்படுத்தும் சோதனைகளைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) **நீதி 28:3 ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய் அடிக்கும் மழை** ஆகாரம் விளையாததினால் பஞ்சம் உண்டாகும். பஞ்சத்தின் நிமித்தம் சரீரத்தில் ஏற்படும் நோய் - வறுமை - மரணம் என்பவற்றை ஏற்படுத்தும் காரணியாக பெருமழை அமைகின்றது. சரீரபிரயாசத்தின் பலன்களின் மீது உண்டாகும் சேதங்களையும் குறிக்கும்.

(ii) **ஏசாயா 28:15** (பெருமழையினால் உண்டாகும்) பெருவெள்ளத்தினால் வரும் **வாதைகள்** ஆகும். சரீரப்பிரகாரமாய் உண்டாகும் நோய்கள், சரீரத்தின் வேதனைகள், மரண அச்சுறுத்தல்கள் என்பவற்றைக் குறிக்கும்

(iii) நீதி 27:15 **அடைமழை (பெருமழை)யினால் உண்டாகும் ஒழுக்கு.** இங்கு ஒழுக்கு என்பது சண்டைக்காரியான ஸ்திரிக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. ஏனெனில் மனைவியானவள் எலும்பிற்கும், மாம்சத்திற்கும் உரியவளாய் இருக்கிறாள். (ஆதி 2:23)

**ஒழுக்கு** என்பது மனைவியின் சண்டைகளினால் மாத்திரமல்ல, பிள்ளைகளால் உண்டாகும் வேதனைகளையும் குறிக்கும். (நீதி 19:13) குடும்பத்தில் உண்டாகும் பிரச்சினைகளினால் சரீரப்பிர காரமாய் உண்டாகும் வேதனைகளைக் குறிக்கும்.

❖ (பிரசங்கி 10:18இல் "கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்" இங்கு **கைகளின் நெகிழ்வு** என்பது **ஜெபக்குறைவு** என்று பொருள். **தேவைகளுக்கு தேவனைச் சார்ந்திராத நிலையிலும்** வீடு ஒழுக்காகும்)

## ✠ பெருவெள்ளம்

பெருவெள்ளம் என்பது மனிதனுக்கு **ஆத்துமாவில்** ஏற்படுத்தும் சோதனையைக் குறிக்கும்.

(i) **ஏசாயா 25:4: கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப் போல் இருக்கையில்...**
பிரச்சினைகள், வேதனைகள், சோதனைகளினால் ஆத்துமாவில் உண்டாகும் பாரத்தை குறிப்பதாகும். மனநோவு, மனச்சோர்வு போன்றவற்றை உண்டாக்குவதாகும்.

(ii) **ஏசாயா 28:15: வாதை பெருவெள்ளமாய் புரண்டு வந்தாலும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு **வாதை** என்பது சரீரத்தில் மாத்திரமல்ல **ஆத்துமாவிலும்** வேதனையை உண்டுபண்ணி, நம்முடைய எண்ணங்கள், சிந்தனைகள் யோசனைகளில் மாற்றத்தை உண்டுபண்ணி விடும் காரியங்களாகும். தேவனைக் குறித்த தவறான எண்ணங்கள் உண்டாகி பின்மாற்றத்தின் காரணியாய் அமைபவையாகும்.

(iii) **சங்கீதம் *124:4* வெள்ளங்கள் நமது ஆத்துமாவின் மேல் பெருகி சங்கீதம் 69:1 வெள்ளங்கள் என் ஆத்துமாவின் மேல் பெருகி....**

இங்கு **வெள்ளங்கள்** என்னும் போது,

- ❖ வேதனையான வார்த்தைகளினால் இருதயத்தில் (ஆத்துமாவில்) உண்டாகும் கசப்புகள் (சங் *124:6*)
- ❖ வேடர்களின் கண்ணி (நயவஞ்சகங்கள்) நம்முடைய ஆத்துமாவை மயக்கும் காரியங்கள். (சங் *124:7*)
- ❖ கொந்தளிக்கும் ஜலங்களினால் (சங் *124:5*) ஆத்துமாவிலே சேரும் **குப்பைகள் - உலக ஆசைகள் - தவறான இச்சைகள்** போன்றவற்றைக் குறிக்கும்.

## ✠ காற்று :

காற்று என்பது **வார்த்தைகளினால்** உண்டாகும் சோதனைகளாகும். (இன்றைக்குப் பலமாய் கிரியை செய்து கொண்டிருக்கும் அந்தி கிறிஸ்துவின் ஆவிகளாகும்.)
போதகர்களாய் இருந்தோம் என்று சொல்பவர்கள் கூட இக்காற்றில் சிக்கித் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூசிக்கும்படி செய்துள்ளது.)

(i) **யாக்கோபு *1:6* சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலை கின்ற கடலின் அலைக்கு ஒப்பாவான்.**
சந்தேகங்களை உண்டு பண்ணுகின்ற நம்பிக்கையற்ற வார்த்தை களாகும். சந்தேகங்களினால் உண்டாகும் அவிவிசுவாசம் நம்மை நிலைகுலையச் செய்யும் (காற்று நம்மை மோதி தள்ளுவது போலாகும்)

(ii) **எபேசியர் 4:14 மனுஷருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினால்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சூது - வஞ்சகம் - தந்திரம் என்பவைகள் பிசாசினுடைய குணாதியங்களுடன் தொடர்புள்ளவைகளாகும்.

- **சத்தியத்தைக் கைக்கொள்ளாததினால்,**
- **கிறிஸ்துவுக்குள் வளராததினால்,**
- **நாம் இன்னும் குழந்தைகளாயிருப்பதினால்,**

**ஊழியங்கள்** என்னும் பெயரில் நடைபெறும் **அட்டூழியங்களை** அடையாளம் கண்டுகொள்ளப் பலரால் முடியவில்லை. சூதான காற்றில் பலர் சிக்குண்டுபோனார்கள்.

(iii) **எபிரேயர் 13:9:** பலவிதபோதனைகளால் உண்டாகும் அலைப்பு.

எப்பொழுதெல்லாம் **வேதத்தில் தெளிவில்லையோ**
எப்பொழுதெல்லாம் **வேதத்தில் உறுதியில்லையோ,**
எப்பொழுதெல்லாம் **வேதத்தில் கண்திறக்கவில்லையோ,**
அப்பொழுதெல்லாம்,
**அலைப்புண்டாகும்.**
**நம்மை இலைகளைப் போல் உதிரப்பண்ணும்.**

ஆனால், **புத்திமானோ கன்மலையில் நிலைத்திருப்பான்**

❖ வேதத்தை ஆவி - ஆத்துமா - சரீரத்தில் காப்பவன் புத்திமான்! (யோசுவா 1:8)

❖❖ வேதத்தின் அறிவில் தேறுபவன் புத்திமான்!! (நீதி 1:5)

❖❖❖ வேதத்தில் தெளிபடைவன் புத்திமான்!!! (நீதி 8:8-9)

**"கற்றுக் கொண்டதை கைக்கொண்டு வாழ்வோம்"**

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

③

# இயேசுவின் தெய்வீகத்தின் இரகசியம் – 1

ஆதியிலே **தேவன்** வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்.

(ஆதி *1:1*)

இங்கு **தேவன்** என்னும் தமிழ் வார்த்தையானது மூலமொழியாகிய எபிரேய மொழியிலே **“ஏலோஹிம்”** என்பதாகும்.

**“ஏலோஹிம்”** என்னும் பெயரிலே **வேதாகமத்தில் தேவன்** தன்னை வெளிப்படுத்தியுள்ளார். **சிருஷ்டிப்பின்** போது தன்னை **ஏலோஹிம்** ஆகவெளிப்படுத்தியுள்ளார்.

**ஏலோஹிம்** என்பது மூலமொழியிலே பன்மைச் சொல்லாகும். இப்பன்மைத் தன்மையினை புரிந்து கொள்ளாமையினால், பலவேத ஆராய்வாளர்கள், இச்சொல்லானது **தேவனையும் - தேவ தூதர்களையும்** குறிக்கின்றது என்பதாக விளக்கவுரைகளையும், வியாக்கியானங்களையும் செய்துள்ளார்கள். இவ்விளக்கவுரைகளின் அடிப்படையில் தங்கள் சபைக் கொள்கைகளை அமைத்துக் கொண்டு பலசபைப் பிரிவுகள் இயங்குகின்றன. (இந்தக் கொள்கையின் அடிப்படையிலே தெய்வீகத்திற்கு எதிரான விவாதங்களும், தர்க்கங்களும் உண்டு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவன் ஒருவரே** (உபா 6:4) என்று வேதாகமம் சொல்லும் போது தேவன் பன்மையாய் இருக்கின்றார் என்பது எப்படி? என்று வேதத்தைப் புரிந்து கொள்ளாதவர்களும், பரிசுத்த வேதாகமத்திற்கு எதிராக கூச்சல் போடுகிறவர்களும் உண்டாக்கும் சந்தேகங்களினால் **விசுவாசிகள் சிக்கித்தவிக்கின்றார்கள் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.**

வேதாகமத்திற்கான கேள்விகளை வேதாகமத்தின் அடிப்படையிலும், வேதாகமத்திற்குள்ளும், வேதாகமத்தின் ஆதாரங்களின் அடிப்படையிலும்.

- விளங்கிக் கொள்ள வேண்டும்.
- விளக்கப்பட வேண்டும்.

இதனைக் கடந்து, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிஷேசத்தை கொண்டு வந்தால் கூட நாம் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும், அவ்வாறு கொண்டு வருபவன் சபிக்கப் பட்டவன் என்பதாக வேதாகமம் நம்மை எச்சரிக்கின்றது. (கலா 1:8-9)

(வேதாகமத்தின் இம்முன்னெச்சரிப்புகள் **இன்று** நிறைவேற்றமடைந் திருப்பதை நாம் அனைவரும் அறிவோம். வேதாகமத்தின் முன்னறிவிப்பு நிறைவேறுவது வேதாகமத்தினை உண்மையாக்கும் சாட்சிகளாகும்.)

**ஆதாரம் *1***
தேவன் ஒருவரே
அவர் சிருஷ்டிகளுக்கூடாகவும், வேத வாக்கியங்களுக்கூடாகவும் தன்னுடைய **தெய்வீகத்தை** வெளிப்படுத்தியுள்ளார்.
வேத வாக்கியங்களை ஆராய்வதின் மூலமே இவ்வாறான மறைபொரு ளையும் ஆழங்களையும் அறியலாம்.

**❖ தேவன் - ஏலோ<u>ஹி</u>ம்**

| | | | |
|---|---|---|---|
| தெய்வீகம் - | பிதாவாகிய தேவன் | குமாரனாகிய தேவன் | ஆவியானவரான தேவன் |
| உருவம் - | காணமுடியாதவர் | காணக்கூடியவர் | காணமுடியாது, உணரக்கூடியவர் |
| கிரியை - | மனவிருப்பம் (சித்தம்) | செயல் (கிரியை) | வார்த்தை (ஆவி) |
| சாயல் - | ஆத்துமா | சரீரம் | ஆவி |
| | பரமண்டலங்கள் | பூமி (உலகம்) | சபை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖❖ (ஆதியாகமம் 1:26) (ஆதியாகமம் 1:27)

பின்பு : தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக.

இவ்வேத வாக்கியத்தின்படி, தேவன் மனுஷனை உண்டாக்கிய பொழுது மனுஷனுக்குள்ளாகத் தனது **முழுத்தேவ திட்டத்தையும்** தேவன் வெளிப்படுத்தியுள்ளார்

(i) மனிதனுக்குள்ளே ஆவி - ஆத்துமா - சரீரம் என்னும் மூன்று பகுதிகள் உள்ளடங்கியுள்ளன. (ஆகவே மனிதன் மூன்றானவன் அல்ல....) (1தெச 5:23)

- ஆவியில்லாத மனிதன் - பிணம்
- ஆத்துமா இல்லாத மனிதன் - மிருகம்
- சரீரம் இல்லாத மனிதன் - வெறுமை (அங்கங்கள் சேர்ந்ததே மனிதன்.)

| |
|---|
| **ஏலோஹிம்** என்பதில் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், ஆவியானவராகிய தேவன் மூவரும் ஒன்றித்திருக்கிறார்கள். |

மனுஷனுடைய Only சரீரம் - Only ஆவி - Only ஆத்துமா என்று பிரித்துக் கொள்வது தவறானதோ அவ்வாறே தேவனுடைய தெய்வீகத்தையும் கூறுபோடுவது அமையும்.

(ii) மனுஷனுக்குள்ளே ஆவி - ஆத்துமா - சரீரம் உண்டு (1தெ5:23)
ஆத்துமா - மனவிருப்பம் - சித்தம் - எண்ணம் - யோசனை - திட்டம்
ஆவி - வார்த்தை (மனவிருப்பை வெளிப்படுத்துவது)
சரீரம் - கிரியை (மனவிருப்பை செயல்படுத்துவது)

- காணமுடியாத ஆத்துமாவின் **சித்தத்தை** - ஆவியில் (வார்த்தையில்) வெளிப்படுத்தும் போதே **உணர முடியும்.**
- காண முடியாத ஆத்துமாவின் சித்தத்தை - கிரியையில் (செயலில்) வெளிப்படுத்தும் போதே **அறிய முடியும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✠ இது **தேவனுடைய சாயல்** ஆகும்.

சித்தத்தை ஆவியிலும், கிரியையிலும் வெளிப்படுத்துவதே தேவசாயலாகும்

இத்தேவசாயலினை பிரதிபலிப்பதே ஒருவரை ஆசீர்வதிப்பதாகும்.

நாம் ஒருவரை ஆசீர்வதிக்கும் போது, ஒருவருடைய தலையிலே கையை வைத்து ஆசீர்வதிக்கின்றோம்.

**உள்ளத்தின் விருப்பத்தை,** வாயின் **வார்த்தையாக** வாழ்த்துதலாகவும், தலையில் கைவைப்பதின் மூலம் **சரீரப்பிரகாரமாகவும்** வெளிப்படுத்துகின்றோம்.
இதுவும் **ஆசீர்வதிப்பதினுள் மறைந்திருக்கும் தேசவசாயலின் இரகசியமாகும்**

(iii) **ஆதியாகமம் 1:27** ஏலோஹிம் (தேவன்) தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்.

இவ்வேத வாக்கியத்தின் உண்மையான பொருளினை அறிந்து கொள்ளுவதற்கு,
மனிதனுடைய சிருஷ்டிப்பைக் குறித்த மற்றவேத வாக்கியங்களையும் தேடி ஆராயும் போதுதான் தெளிவு பெறமுடியும்

(அ) **மல்கியா 2:10** நம்மெல்லோருக்கும் **ஒரேதேவன்** இல்லையோ? **ஒரேதேவன்** நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ?

(ஆ) **கொலோசியர் 1:16 (இயேசு கிறிஸ்துவைக் கொண்டு)** சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

(இ) **யோபு 33:4 தேவனுடைய ஆவியானவர்** என்னை உண்டாக்கினார்? **சர்வ வல்லவருடைய சுவாசம்** எனக்கு உயிர்கொடுத்தது.

மேலேயுள்ள வேதவாக்கியங்களின் அடிப்படையிலே மனிதனை உண்டாக்கியது.
(i) தேவனா? (ii) கிறிஸ்துவா? (iii) ஆவியானவரா?

பிதாவுடைய - சித்தம் - (ஆத்துமா)
கிறிஸ்துவுடைய - கிரியை - (சரீரம்)
ஆவியானவருடைய - சுவாசம் - (ஆவி) இவ்வாறு மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவி - ஆத்துமா - சரீரம் என்ற தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்.
தேவசாயலுக்குள்ளே • பிதாவாகிய தேவனுடைய சாயல்
• குமாரனாகிய தேவனுடைய சாயல்
• ஆவியானவராகிய தேவனுடைய சாயல்

இருப்பதைப் போலவே, **ஏலோஹிம்** என்ற சொல்லுக்குள்ளும்

- பிதாவாகிய தேவன்
- குமாரனாகிய தேவன்
- ஆவியானவராகிய தேவன் - மறைந்துள்ளனர் என்பதைக் காண மனக் கண்கள் திறக்கப்பட வேண்டும்.

(இது தேவனையும் தேவ தூதர்களையும் குறிப்பது அல்ல....)

மனிதனது **ஆவி - ஆத்துமா - சரீரம்** என்பதற்குள்ளே,

- **ஆத்துமா** - பிதாவினுடைய **ரூபம்** - ஒருவரும் ஒரு காலமும் காணக்கூடாதது
- **சரீரம்** - குமாரனுடைய **ரூபம்** - மனிதர்கள் காணும் படியானது.
- **ஆவி** - ஆவியானவருடைய **ரூபம்** - உலகம் காண முடியாத, விசுவாசிகள் உணரும்படியானது.

இந்தப்படியே, சிருஷ்டிகளுக்குள்ளும் தெய்வீகம் மூன்றாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது என்பதை வேத வாக்கியங்களை ஆராயும் போது கண்கள் காணமுடியும்.

(❖ மூன்று என்பது தெய்வீகத்தின் சாட்சியாகும்) **ஆதாரமாக:-**

| | | | |
|---|---|---|---|
| 1) வானம் | 1ம் வானம் | 2ம் வானம் | 3ம் வானம் |
| 2) பூமி | 1ம் பூமி (அழிந்தது) | 2ம் பூமி (இருப்பது) | 3ம் பூமி (புதிய பூமி) |
| 3) உலகம் | காற்றாலாகிய உலகம் | மண்ணாலான உலகம் | தண்ணீராலான உலகம் |
| 4) மனிதன் | ஆவி | ஆத்துமா | சரீரம் |
| 5) நியாயதீர்ப்பில் | எண்ணங்கள் | செயல்கள் | வார்த்தைகள் |
| 6) படைப்பு | காணக்கூடியவை | காணக்கூடாதவை | உணரக் கூடியவை |
| 7) பொருட்கள் | திண்மம் | திரவம் | வாயு |
| 8) உயிர்கள் | பறப்பன (வானம்) | நடப்பன. (மண்) | நீந்துவன (தண்ணீர்) |
| 9) மண்டலம் | சூரியமண்டலம் | சந்திரமண்டலம் | ஆகாயமண்டலம் |
| 10) சோதனைகள் | பெருமழை | பெருவெள்ளம் | காற்று |
| 11) மனிதசத்துரு | உலகம் | மாமிசம் | பிசாசு |
| 12) முழங்கால்படிபவை | வானோர் | பூதலத்தோர் | பூமியின் கீழானோர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன் நமக்குத் தந்த வேதாகமத்தின் ஆழங்களில் மறைந்துள்ள விலையுயர்ந்தவற்றை நாம் காண வேண்டும். அப்போது நாம் இன்னும் விசுவாசத்தில் உறுதிப்படுவதை உணரலாம்.

**ஆதாரம் 2.**

- **தேவனை ஒருவனும் ஒருகாலமும் கண்டதில்லை (யோவான் 1:18)**

  இவ்வேதவாக்கியத்தில் வரும் தேவன் என்னும் சொல்லானது **பிதாவாகிய தேவனைக் குறித்துச் சொல்லப்பட்டது.**

  ஆதாரம் : யோவான் 5:37ல் இயேசு இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

- **யாத்திராகமம் 6:3 நான் யேகோவா** என்று மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தியவர் யார்?

  இதற்கான தெளிவினை அடைவதற்கு **யேகோவா** என்று பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட மூன்று வேத வாக்கியங்களை ஆதாரமாக காணலாம்.

(i) **சங்கீதம் 68:4** தேவனைப்பாடி அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள், வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தம் **பண்ணுங்கள்,** அவருடைய நாமம் **யேகோவா.**

சங்கீதக் காரனுடைய இச்சங்கீதத்தைப் போலவே, **யேகோவாவிற்கு** வழியை ஆயத்தம் பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார். (ஏசாயா 40:3). இத்தீர்க்கதரிசனமானது புதிய ஏற்பாட்டில் நிறைவேறியதை சுவிஷேச நூல்களில் காணலாம்.
(மத்தேயு 3:3) (மாற்கு 1:3) (லூக்கா 3:4-5)

கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே **வனாந்தரத்தில்** கூப்பிடுகிறவனுடைய சத்தமாய் இருந்தவன் **யோவான் ஸ்நானகன்** ஆவான்.
(மத்தேயு 3:3) (மாற்கு 1:3) (லூக்கா 1:76-77) (யோவான் 1:23)

**யோவான் ஸ்நானகனிடத்தில்**

- வனாந்தரத்தில் ஞானஸ்நானம் பெற்றவரும், (மத் 3:16) (மாற்கு 1:9) (லூக் 3:21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரிசுத்த ஆவியானவருடைய அடையாளம் காட்டப்பட்ட வரும். (லூக் 3:22) (யோவா 1:32)
- உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கும் ஆட்டுக்குட்டி என்று சாட்சி பெற்றவரும். (யோவான் 1:36)

**இயேசு கிறிஸ்துவேயாகும்.**

❖ ஆகவே, சங்கீதம் 68:4 - ஏசாயா 40:3 இலும் சொல்லப்பட்ட **யேகோவா** என்பது **இயேசுவையே குறிக்கும்**

(ii) **ஏசாயா 12:2**

இதோ, தேவனே என் இரட்சிப்பு, நான் பயப்படாமல் நம்பிக்கையாய் யிருப்பேன். கர்த்தராகிய யேகோவா என் பெலனும் என் கீதமுமானவர். **அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.**

இவ்வேதவாக்கியத்திலே **யேகோவாவே** இரட்சிப்புமானவர் என்பதைக் காணலாம்.
புதிய ஏற்பாட்டிலே மரியாள் ஒரு குமாரனைப் பெற்றபொழுது **இயேசு** என்று பெயரிட்டார்கள்.
(மத்தேயு 1:21) (லூக்கா 2:21)

**இயேசு** என்பதன் பொருள் **இரட்சகர்** ஆகும். அவர் ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்னும் அர்த்தமுள்ளது.

❖ **இயேசு இரட்சகர்**

❖ இங்கும் **யேகோவா** என்னும் பெயர் **இயேசுவுக்கே** பொருந்துகிறது.

(iii) **ஏரேமியா 16:21**

இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன், **என் கரத்தையும்** என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப் பண்ணுவேன், என் நாமம் **யேகோவா** என்று அறிந்து கொள்வார்கள்.

- **என் கரத்தை** தெரியப்படுத்தும் போது **என் நாமம் யேகோவா** என்று அறிந்து கொள்வார்கள்.

இந்த வேத சத்தியத்தின் கருத்திலே நாம் நிஜத்தைக் காண வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்தெழுந்த இயேசு தம்முடைய சீடர்களுக்கு, உயிர்த்தெழுந்த தம்மை சீஷர்கள் அறிந்து கொள்ளும்படி,

- தம்முடைய ஆணியடிக்கப்பட்ட கரங்களின் காயத்தை காட்டியதும். (யோவான் 20:20) (லூக்கா 24:39)
- தம்முடைய ஆணிகளால் உண்டான காயத்தைக் கண்டால் மாத்திரமே விசுவாசிப்பேன் என்ற தேமாவுக்கு (யோவான் 20:25), மீண்டும் தேமாவுக்கு தரிசனமாகி (யோவான் 20:27) தம்முடைய ஆணிகளாலுண்டான கரத்தை காட்டியதும்.
- தாம் பரமேறிய போது, (ஆணிகளால் உண்டான காயப்பட்ட) தம்முடைய கைகளை உயர்த்தி ஆசீர்வதித்ததையும். (லூக்கா 24:50)

நாம் வேதாகமத்திற்குள் ஆராயும் போது,
தம்முடைய கரத்தைத் தெரியப்பண்ணி, என் நாமம் **யேகோவா** என்று அறிந்து கொள்வார்கள் என்பது இயேசுகிறிஸ்துவுக்குள் நிறைவேறுவதைக் காணலாம்.

❖ **இங்கும், யேகோவா** என்பது **இயேசுவையே** சாட்சியிடுகின்றது.

இம்மூன்று வேதவாக்கியங்களின் ஆதாரங்களின்படி **யேகோவா** என்னும் நாமத்திலே மோசேக்குத் தன்னை வெளிப்படுத்தியவர் **இயேசுகிறிஸ்து** ஆவார் என்ற மிகவும் **ஆழமான இரகசியத்தைக்** கண்டுகொள்ளலாம். (ஏசாயா 26:4 = 1கொரி 10:4) (ஓசியா 12:4-5)

(பழைய ஏற்பாட்டுக் காலங்களில் வார்த்தைகளில் தெளிவு இல்லை, **இரகசியங்கள் ஆதாம் முதல் யோவான் வரையான தலைமுறைகளுக்கு மறைவாயிருந்தன.** ஆனால் கட்டளைகளை மாத்திரம் கடமையாய்க் கடைப் பிடித்தார்கள். அவற்றின் ஆவிக்குரிய இரகசியங்கள் வெளிப் படுத்தப்படவில்லை.)

❖ மூலமொழியாகிய எபிரேயமொழியில் YHWH (யேகோவா) என்னும் எழுத்தின் மூலத்தை நாம் காணும் போது இன்னும் ஆச்சரியமான இரகசியத்தை காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எபிரேய எழுத்துக்கள் வலம் இருந்து இடமாக எழுதப்பட்டு வாசிக்கப் படும். இங்கு நம்முடைய இடது இருந்து வலமாக எழுதப்பட்டுள்ளது என்பதை காணவும்)

**YHWH (யேகோவா)** என்னும் பெயரின் இன்றைய நவீன எழுத்து வடிவின் அர்த்தத்தினை,
The Ancient Hebrew Letters என்னும் புராதன எபிரேய எழுத்தின் **ஓவிய வடிவத்தில்** காணும் பொழுதுதே காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| **Y** | **H** | **W** | **H** | – யேகோவா |
| Yod | Hay | Vav | Hay | — எழுத்து உச்சரிப்பில் |


— புராதன ஓவிய வடிவம்

| | | | | |
|---|---|---|---|---|
| Hand | Behold | Nail | Behold | — ஆங்கில அர்த்தம் |
| கை | கவனித்துபார் | ஆணி | கவனித்துப்பார் | — தமிழ் அர்த்தம் |

❖ கையைப்பார் ஆணியைப்பார் என்று பொருள் கொள்ளும்

"ஆணியடிக்கப்பட்ட கரங்களைப் பார்" என்னும் ஆவிக்குரிய அர்த்தம் புலனாகும்.

❖ **யேகோவா என்னும் பெயருக்குள் இயேசு என்ற தேவ இரகசியம் வெளிப்படுவதைக் காணலாம்.**

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதாரம் *3***

- சரீரம் ஒன்றே.
- **அங்கங்கள் சரீரமல்ல.**
  (அங்கம் என்பது ஒரு செயலை செய்யும் உறுப்பு)
- அங்கங்கள் சேர்ந்ததே சரீரம்
  (அங்கங்கள் இல்லாவிடில் சரீரம் இல்லை)

| |
|---|
| ❖ அந்தப் பிரகாரமாகக் **கிறிஸ்துவும் இருக்கிறார்** (*1*கொரிந்தியர் *12:12*) |

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களுக்குள்ளே இச்சத்தியத்தின் இரகசியங்களைக் கண்டு கொள்ளலாம்.

**வேத வாக்கியங்களே நமக்கு ஆதாரம்**

(i) **ஏசாயா 52:10** எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும், கர்த்தர் **தம்முடைய புயத்தை** வெளிப்படுத்துவார்.
பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாம் நமது தேவனுடைய **இரட்சிப்பைக்** காண்பார்கள்.

- இது இயேசுவின் பிறப்பைக் குறித்த தீர்க்கதரிசனமாகும். (மத்தேயு *1:22*)
- **இயேசு** என்பதன் பொருள் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர் என்பதாகும். (மத்தேயு *1:21*) (லூக்கா *2:11*)

(❖ மூலமொழியாகிய எபிரேயுவில் **யெஷுவா அல்லது யோசுவா** என்பதன் அர்த்தம் **யேகோவாவே** மீட்பு என்பதாகும்.)

- மரியாள் : தேவனைப் புகழும் போது... **தம்முடைய புயத்தினால்** பராக்கிரமம் செய்தார் என்று கூறினாள். (லூக்கா *1:51*)

❖ **இயேசுவே கர்த்தருடைய புயம் (பிறப்பில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) **ஏசாயா 53:1 கர்த்தருடைய புயம்** யாருக்கு வெளிப்பட்டது?

- பழைய ஏற்பாட்டிலே தேவனுடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்து பேசுகிறபோது, ஏசாயா இதனைச் சொன்னார். (யோவான் 12:41)

- புதிய ஏற்பாட்டிலே இயேசு இத்தனை அற்புதங்களைச் செய்தும், அவரை **விசுவாசியாதபோது,**
**ஏசாயா தீர்க்கதரிசியுடைய வார்த்தை நிறைவேறுவதை** வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. (யோவான் 12:38)

- இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாய் பேசப்படும் அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பதை சாட்சியிடுகின்றது. (லூக்கா 2:34)

❖ **இயேசுவே கர்த்தருடைய புயம் (ஊழியத்தில்)**

(iii) **என்புயங்கள் ஜனங்களை நியாயந்தீர்க்கும்** (ஏசாயா 51:5)

என்புயங்கள் நியாயந்தீர்க்கும் என்னும் பழைய ஏற்பாட்டின் மறைவானதை, புதிய ஏற்பாட்டில் ஆராயும் போது,

- நியாயத் தீர்ப்பு என்பது இயேசுவின் வருகையில் நடைபெறும் என்பதையும்,
- **இயேசுவே நியாயாதிபதி** என்பதையும் வேத வாக்கியங்கள் சாட்சியிடுகின்றன.

❖ நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.
(ஆதாரம் : (1கொரி 5:10) (1 தெச 1:10) (யோவான் 5:22)

(இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினை உறுதிசெய்யும் வேதவாக்கியமாகும்)

தேவ மனிதர்களும் இவ்வேதவாக்கியத்தினை உறுதிப்படுத்தி சாட்சியமிட்டுள்ளனர். (யோபு 19:25) (ஏசாயா 11:11) (எபிரேயர் 9:28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இயேசுவே கர்த்தருடைய புயம் (வருகையில்)

❖ இயேசுவே தேவனாயும் வெளிப்படுவார்

என்னும் மறைவான தேவ இரகசியத்தையும் கண்டு கொள்ளலாம். ஆதாரம் : (ஏசாயா 25:9) (யோபு 19:25) (1பேதுரு 1:17)

கர்த்தருடைய புயம் என்பதற்கு வேத ஆதாரமாகக் கொண்ட மூன்று வேத வாக்கியப் பகுதிகளுக்குள்ளும் (ஏசாயா 52:10) (ஏசாயா 53:1) (ஏசாயா 51:5)

இயேசுவையே புயமாக வெளிப்படுத்தினாலும்,

- இயேசுவின் பிறப்பு
- இயேசுவின் ஊழியம்
- இயேசுவின் வருகை என்ற மூன்று தொடர்புள்ளதைக் காணலாம்.

இங்கு இயேசுவின் வருகை என்னும் போது,

- நியாயாதிபதியாகவும்
- இராஜாவாகவும்
- தேவனாகவும் வெளிப்படுவார் என்பதைக் காணலாம்.

வேத வாக்கியங்களும் இதனைச் சாட்சியிடுகின்றன.

❖ இயேசுவின் தெய்வீகம் என்பது தேவனுடைய அங்கம்

ஏலோஹிம் - யேகோவா - கர்த்தருடையபுயம் என்பதற்குள் மறைந் திருக்கும் இயேசுவின் தெய்வீகத்தை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

**"இது தர்க்கங்களை தகர்க்கும் நம் போராயுதம்"**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ④

# புழுதியின் இரகசியம்

❖ தமிழ் வேதாகமத்தில் **புழுதி** என்பதும் **தூசி** என்பதும் ஒரே அர்த்தத்தையே உடையனவாக வருவதைக் காணலாம்.

❖ புழுதி (தூசி) என்பது **மண்ணுடனான** தொடர்புடையதாகவே வருகின்றது.

❖ புழுதி (தூசி) என்னும் சொல்லானது தமிழ்வேதாகமத்திற்குள் பல அர்த்தங்களை மறைத்துள்ளது.

வேதவாக்கியங்களைப் பகுத்து - நிதானித்து ஆராயும்போது, வேதாகமத்தில் புழுதி (தூசி) என்னும் வார்த்தைக்குள்ளே,

- சாதாரண அர்த்தம்
- ஆவிக்குரிய அர்த்தம்
- இரகசிய அர்த்தம் என்ற நிலையில் பல ஆழங்களின் மறை பொருளைக் காணலாம்.

❖ புழுதி (தூசி) என்பது மண்ணின் தூளான புழுதி (தூசி) என்பதையே **சாதாரண அர்த்தத்தில்** குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஏற்பாட்டிலே தேவமனிதர்கள் அல்லது வேதாகமத்துக் கதாபாத்திரங்கள் தாங்கள் பாவம் செய்தபோதும், தங்களைத்தாழ்த்தும் போதும் புழுதி (தூசி)யைத் தங்கள் தலையின்மேல் போட்டுக்கொண்டு தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தி தங்களைத் தாழ்த்துவதை வேதாகமத்திலே காணலாம்.
(யோசுவா 7:6) (யோபு 2:12) (வெளிப்படுத்தல் 18:19)

❖❖ (i) புழுதி (தூசி) என்பது **ஈரமற்றகாய்ந்த மண்ணின்தூள்** என்பதே மிகச்சிறப்பான அர்த்தமாகும்.
**ஈரம்** என்பது **தண்ணீர்** என்பதையும்,
**தண்ணீர்** என்பது **ஆத்துமாவையும்** குறிக்கும்.
ஆகவே,
**ஈரமற்ற மண்** என்பது **ஆத்துமாவில் மரித்தநிலையில்** உள்ளவர்களைக் குறிக்கும் **ஆவிக்குரிய அர்த்தத்தை** உடையது.
(**நீர்க்கால்கள்** நூலின் **மனிதசிருஷ்டிப்பின் இரகசியம்** என்னும் கட்டுரையை பார்க்கவும்)

(ii) **ஈரமற்றமண்** என்பதிலே,
**ஈரம்** என்பது **தண்ணீரால் உண்டாகும்** என்பதையும்,
**தண்ணீர்** என்பது **வார்த்தையை** குறிக்கும் என்பதையும், (எபேசியர் 5:26) (நீதிமொழிகள் 13:14) (நீதிமொழிகள் 18:4)
எனவே,
**ஈரமற்றமண்** என்பது **தேவனுடைய வார்த்தையை அறியாதவர்கள்** என்னும் **ஆவிக்குரிய அர்த்தத்தையும்** குறிப்பதாகும்.

(iii) **ஜனங்களைக்** குறிக்கும் **ஆவிக்குரிய அர்த்தத்தையும்** உடையது,
(ஏசாயா 29:5) (ஏசாயா 40:15) (2 நாளாகமம் 1:9)

இவ் ஆவிக்குரிய அர்த்தங்களை வேதவாக்கியங்களின் மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

(அ) கர்த்தர் எளியவனைப் **புழுதியில் (தூசி)** இருந்து எடுத்து உயர்த்துவதைகுறிக்கும் வேதவாக்கியங்கள் ஆதாரமாகும்.
(1சாமுவேல் 2:8) (சங்கீதம் 113:7) (1 இராஜாக்கள் 16:2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) தூசியை உதறிவிட்டு எழுந்திரு...... சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன்கழுத்திலுள்ள கட்டுக்களை அவிழ்த்துவிடு. (ஏசாயா 52:2)

- **ஆவிக்குரிய இரகசியத்தில்** குறிக்கப்படும் இவர்கள் தேவனால் மீட்டுக்கொள்ளப்படுவதற்கும், தேவனிடம் மனம் திரும்புவதற்கும் ஏதுவானவர்கள் என்பதை அறியலாம்.
- இவர்கள் இன்னும் பூமிக்குரியவர்கள்.
- தேவனின் அழைப்பிற்குப் பாத்திரமானவர்கள்.

❖❖❖ (i) **அக்கினிக் கற்களினால்** உருவாக்கப்பட்டவர்கள் - தேவதூதர்கள் - (எசேக்கியேல் 28:13)

(ii) **மண்ணினால்** உருவாக்கப்பட்டவர்கள் - மனிதர்கள் (ஆதியாகமம் 2:7)

(iii) **புழுதி (தூசி)யாய்** போனவர்கள் - பாதாளத்திற்குரிய வர்கள். (யோபு 17:16)

(1) **தேவதூதர்கள்** - (வானமண்டலம்) - **மேலான உலகத்திற்குரியவர்கள்** (இவர்கள் கற்களினால் மூடப்பட்டிருக்கின்றார்கள். தேவனுடைய பர்வதத்தில் இருந்து ஒரு கூட்டத்தினர் தள்ளப்பட்டபோது ஒளியிழந்த கற்களாய் (கறுப்பு கற்களாய்) பூமியிலே விழுந்தார்கள். கல்லின் வழிபாடு பூமியிலே தோன்றியது.)

(கல்லின் இரகசியம் கட்டுரையில் ஆழமான இரகசியங்கள் வெளிவரும்)

(2) **மனிதர்கள்** - (மண்மண்டலம்) - **மத்திய உலகத்திற்குரியவர்கள்.** (கற்களின் தூளான மண்ணினால் இவர்களைத் தேவன் உருவாக்கினார். நீர் தேவதூதரிலும் சற்றுச்சிறியவனாக்கினீர் என்ற வேத வாக்கியங் களின் (சங்கீதம் 8:5) (எபிரேயர் 2:7) அர்த்தங்களுக்குள் **இவ்வாறும்** பொருள் உண்டு என்பதையும் அறியவேண்டும்.)

(3) **புழுதி (தூசி)யாய் போனவர்கள்** - (தண்ணீர்மண்டலம்) - **கீழான உலகத்திற்குரியவர்கள்.**
(யோபு 17:15) (சங்கீதம் 22:15) (தானியேல் 12:2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேத ஆதாரங்கள்:**

**(அ) வெளிப்படுத்தல் 20:13**

சமுத்திரம் தன்னிலுள்ளமரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன.

**(ஆ) யோபு 26:5**

ஜலத்தின் கீழ்மடிந்தவர்களுக்கும், அவர்களோடே தங்குகிறவர்களுக்கும் தத்தளிப்பு உண்டு.

- கீழான உலகத்திற்குரியவர்கள்.
- பாதாளத்திற்குரியவர்கள்.
- பூதலத்தின் தாழ்விடத்திற்குரியவர்கள் என்பதாக அடையாளப் படுத்தப்படும்.

## இவர்கள் யார்? (எரேமியா 17:13)

- இவர்கள் தேவனைவிட்டு அகன்று போகிறவர்கள்.
- ஜீவதண்ணீர் ஊற்றாகிய தேவனை விட்டு விலகுகிறவர்கள்.
- புழுதியில் பெயர் எழுதப்பட்டவர்கள்.

**வேத ஆதாரங்கள்**

**(அ) சங்கீதம் 30:8**

**புழுதி உம்மைத்துதித்து, உமதுசத்தியத்தை அறிவிக்குமோ?**

சங்கீதக்காரனின் இவ்வேதவாக்கியத்திலே புழுதியிலே பெயர் எழுதப்பட்டவர்கள் தேவனைத் துதிக்க மாட்டார்கள் என்பதையும், அவர்கள் ஜீவதண்ணீர் ஊற்றாகிய தேவனைவிட்டு அகன்று போனவர்கள் என்பதையும் அறியலாம்.

**சங்கீதம் 22:29ல் புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள்.** என்னும் வேதவாக்கியத்தைக் காணலாம்.

இச்சம்பவமானது இயேசுகிறிஸ்துவின் **வருகையின்போதும்,** அவருடைய ராஜ்யம் பூமியில் ஏற்படுத்தப்படும் போது நடைபெறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை நாம் பகுத்து ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டியதாகும். ஏனெனில் 22ம் சங்கீதம் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும். அவருடைய பாடுகளைக்குறித்தும் பாடப்பட்டசங்கீதமாகும். இச் சங்கீதத்தின் பிற்பகுதி வருகையுடன் தொடர்புள்ள காரியங்களாகும்.

**(ஆ)** இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களை இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பியபொழுது, எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால்....
**உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்** என்றார். (மத்தேயு *10:14*) (லூக்கா *9:5*) (அப்போஸ்தலர் *13:51*)

ஜீவதண்ணீரின் ஊற்றாகிய இயேசுகிறிஸ்துவுடைய வார்த்தையைக் கொண்டு சென்ற சீடர்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள், தேவனை விட்டு அகன்றுபோகிறவர்கள்.

- **அவர்களது பெயர் புழுதியில் எழுதப்படும்** என்பதும்,
- இவர்கள் பாதாளத்திற்குரியவர்கள் என்பதுமே,

**கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள் என்பதின் மறைவான இரகசியமாகும்.**

**(இ) யோவான் 8:1-11ம்** வரையிலான வேதப்பகுதியில்.
இயேசுகிறிஸ்துவின் மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு,
விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரியை வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவிடம் கொண்டுவந்தார்கள்.

(இச்சம்பவம் குறித்து ஆராயப்படவேண்டிய பலகாரியங்கள் இருந்தாலும், இக்கட்டுரைக்குத் தேவையான பகுதிமட்டும் எடுக்கப்பட்டுள்ளது)

❖ இச்சம்பவத்திலே இயேசு **தாம் இரட்சகராகவே பூமிக்கு வந்தார்** என்பதை வலியுறுத்துவதைக் காணலாம்.

ஏனெனில் (i) விபச்சாரிக்குத் தீர்ப்பிடவில்லை.
(ii) அவளை மனம் திரும்பும்படியே கூறினார்.
*(யோவான் 8:11)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) வேதபாரகரும், பரிசேயரும் மனச்சாட்சியில் கடிந்து கொள்ளப்பட்டார்கள். (யோவான் 8:9)

ஆனால்;
**இயேசுவோ குனிந்து விரலினால் தரையில் எழுதினார்.**
(யோவான் 8:6) (யோவான் 8:8)

வேதத்தைக் கற்றறிந்த வேதபாரகரும், பரிசேயருமே தம்மீது குற்றம் சுமத்தும் படியான காரியத்தைச் செய்தமையால், **அவர்களது பெயர்களைப் புழுதியில் எழுதினார்.**

இக்காரியமானது, தானியேல் 5:24ன் சம்பவத்திற்கு இணையானது. பரலோகத்தின் தேவனால் அனுப்பப்பட்ட **கையுறுப்பு** எழுதியதைப் போன்று **கர்த்தருடையபுயமாக** வெளிப்பட்ட இயேசுவும் நியாயத்தீர்ப்பின் நாளுக்காக அவர்களது பெயர்களைப்புழுதியில் எழுதினார் என்பதையே நான் விசுவாசிக்கின்றேன்.

❖❖ இச்சம்பவத்தில் விபச்சாரஸ்திரியை கொண்டு வந்த வேதபாரகர், பரிசேயருடைய பாவங்களை எழுதினார் என்று பிரசங்கிக்கிறார்கள்

ஆனால், **பாவங்கள் எழுதப்பட்டதற்கான வேத ஆதாரம் இல்லை.** மாறாக பெயர்கள் எழுதப்படும் என்பதற்கானவேத ஆதாரமே உண்டு. (எரேமியா 17:13)

✠ **பெயர்கள் ஏன் எழுதப்படுகின்றது?**
**புழுதி சர்ப்பத்திற்கு இரையாகும் (ஏசாயா 65:25)**

இவர்கள் சாத்தானுடைய கூட்டத்திற்குரியவர்களாகி நியாயத்தீர்ப்பில் அதற்கான தண்டனை அடைவார்கள் என்பதே **மறைபொருளின் இரகசியம்.**

**ஜீவபுத்தகத்தில் பெயரெழுதப்பட்டவனே பாக்கியவான்.**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

# திருவிருந்தின் இரகசியம்

- இயேசுகிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே தம்முடைய சீடர்களுக்கு ஏற்படுத்தியதே **கர்த்தருடைய பந்தி** என்னும் **திருவிருந்து** ஆகும்.

(*மத்தேயு 26 : 26 – 28*) (*மாற்கு 14 : 22 – 24*) (*லூக்கா 22 : 19 – 22*)

- இயேசுகிறிஸ்து இதனை புறஜாதிகளின் அப்போஸ்தலனான பவுலுக்கும் வெளிப்படுத்தியிருந்தார். (*1 கொரிந்தியர் 11:23*)

- இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னரும் இதில் பங்கு கொண்டார். (*லூக்கா 24:30*)

இவைகள், **திருவிருந்து** என்பதைக் குறித்த ஒரு ஆழமான சிந்தையை நமக்குள் ஏற்படுத்துவதைக்காணலாம்.

திருவிருந்தின் அவசியம் மாத்திரமல்ல, அதன் ஆழத்தையும், அதன் இரகசியத்தையும் நாம் அறிய வேண்டியவர்களாக உள்ளோம் என்பதையும் நமக்குள் உணர்த்துவிப்பதை கண்டுகொள்ள வேண்டியவர்களாயுமுள்ளோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், திருவிருந்தில் எவ்வாறு பங்குகொள்ள வேண்டும் என்ற கட்டளையே, அதன் ஆழத்தை நமக்கு அறியத் தருகின்றது.

- ❖ அபாத்திரமாய் புசிக்கக்கூடாது
- ❖ தன்னைத்தானே சோதித்தறிந்து பங்குகொள்ள வேண்டும்.
- ❖ கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறிய வேண்டும். (ஆதாரம் : 1 கொரிந்தியர் 11 : 28 : 31)

திருவிருந்தை அபாத்திரமாய் (தகுதியற்றவர்களாய்) போஜனபானம் பண்ணுவதினால்,

- அநேகர் பலவீனரும்.
- வியாதியுள்ளவர்களும்
- அநேகர் நித்திரையடைந்தும் உள்ளார்கள் என்ற எச்சரிப்பையும் வேதாகமம் நமக்கு அறியத்தருகின்றது. (1 கொரிந்தியர் 11 : 30 )

திருவிருந்தின் போது,

- இயேசுகிறிஸ்துவை நினைவு கூருகிறோம்.
- இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூருகிறோம்.
- இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூருகிறோம்.

❖ இயேசுகிறிஸ்துவின் திருவிருந்தினைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொடுக்கும் போது அங்கு ஒரு ஒழுங்கு முறையினை ஏற்படுத்தினார்.

திருவிருந்திலே அப்பம்
- எடுக்கப்பட்டு
- ஆசீர்வதிக்கப்பட்டு
- பிட்கப்பட்டு

ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வொழுங்கை வேதவாக்கியங்கள் மூலம் அறியலாம். (மத்தேயு 26 : 26) (மாற்கு 14 : 22) (லூக்கா 22 : 19) (லூக்கா 24 : 30) (1 கொரிந்தியர் 11 : 23 – 24)

ஜீவஅப்பமாகிய இயேசுகிறிஸ்துவும் (யோவான் 6 : 48)

- எடுக்கப்பட்டார்.
- ஆசீர்வதிக்கப்பட்டார்.
- பிட்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறெனில்,

- **பெத்தலகேம்** என்பது அப்பத்தின் வீடு எனப்பொருள் படும். பெத்தலகேமில் பிறந்த இயேசுவும் நமக்காக **எடுக்கப்பட்டார்.**
- யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற போது பிதாவினால் **ஆசீர்வதிக்கப்பட்டார்.**
- சிலுவையிலே நமக்காகப் **பிட்கப்பட்டார்.**

சுவிஷேசமாய் ஜனங்களுக்குள்ளே அறிவிக்கப்படுகின்றார் என்ற ஒழுங்கினை நமக்குள் நினைப்பூட்டுகின்றது.

❖❖ **சரீரம்** என்பது மாமிசமும், இரத்தமும் சேர்ந்ததேயாகும். **மாமிசத்தின் உயிர் இரத்தமாகும்.** (லேவியராகமம் 17 : 11). எனவே சரீரம் நினைவு கூரப்படும் போது **மாமிசம் - இரத்தம்** இவ்விரண்டும் நினைவு கூரப்பட வேண்டியது அவசியமாகும்.

**வார்த்தை மாமிசமாகியது** (யோவான் 1 : 14) இதுவே சாவி வார்த்தை.

**இச்சாவிவார்த்தையின் மூலம்** இயேசுவின் **மாமிசம் - இரத்தம்** ஆகிய இவ்விரண்டும் **வார்த்தையைக் குறிக்கும்** என்னும் சத்தியத்தை அறியலாம்.

(அ) இயேசுகிறிஸ்துவின் **மாமிசத்தைப் புசிப்பது** என்பதும் **அவரது வார்த்தையை** நாம் போஜனமாக புசிக்கின்றோம் என்பதும் **ஆவிக் குரிய இரகசியம்** என்பதனை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

(ஆ) **மாமிசம்** என்பது **பலமான ஆகாரம்** என்பதாகும். நாம் இன்னும் பாலுண்ணும் குழந்தைகளாயிராமல், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாகப் **பூரணபுருஷராக வேண்டும்** என்னும் இரகசிய அர்த்தத்தையும் நமக்கு உணர்த்துகின்றது.

**பலமான ஆகாரம் என்பது,** (எபிரேயர் 5 : 14)

- நீதியின் வசனத்தில் நடப்பதற்குப் பழக்க முண்டாக்கும்.
- நன்மை – தீமையை பகுத்தறியச் செய்யும்.
- ஞானேந்திரியம் உள்ளவர்களாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) **மாமிசம்** என்னும் **வார்த்தையானது** நமக்குள்ளே பெலன் உண்டாக்க வேண்டும். இதுவே **வார்த்தையால் உண்டாகும் தேவபெலன்.**

❖❖❖ **வார்த்தை மாமிசமாகியது** (யோவான் 1 : 14) என்னும் **சாவி வார்த்தை** மூலம் மாமிசத்தின் உயிராகிய **இரத்தமும்** - **வார்த்தையே** என்னும் **சத்தியம்** புலப்படும்.

**இரத்தம்** என்பதும் **வார்த்தை** என்பதைக் குறிக்கின்றது என்னும் வேதாகம சத்தியத்தின் மூலமே :

- **இரத்தம்** குறித்த வேதவாக்கியங்களின் **மறைபொருள் களையும்,** (1 பேதுரு 1 : 2) (வெளி 7 : 14) (வெளி 12 : 11) (ரோமர் 5 : 9)

- **இரத்தத்தைப்பானம்** பண்ணுவது என்பது **புது உடன் படிக்கைக் குரியவர்கள்** என்பதை நினைப்பூட்டும் **ஆவிக்குரிய இரகசி யத்தையும்.**

- **இரத்தத்தினால்** நமக்கு எவ்வாறு **பாவமன்னிப்பு உண்டாகும்** என்பதின் **இரகசிய அர்த்தங்களையும் நாம் கண்டு கொள்ளலாம்.** (எபேசியர் 1:7) (கொலோசியர் 1:14) (வெளிப்படுத்தல் 1:6)

ஆகவே, திருவிருந்திணைப் போஜனபானம் பண்ணுகிறவர்கள் இயேசுவின் சரீரம் இன்னதென்று நிதானித்து **நம்மைநாமே ஆராய்ந்து பார்த்து, நாம் புது உடன்படிக்கைக்கு உரியவர்கள்** என்னும் சத்தியத்தை உணர்ந்து பங்குகொள்ள வேண்டும்.

**அவ்வாறு இல்லாதவன் யார்?**

- அபாத்திரமாய் போஜனபானம் பண்ணி ஆக்கினைத் தீர்ப்புக் குட்பட்டவன்
- தேவனுடைய குமாரனை காலின் கீழ் மிதிக்கிறவன்.
- **தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம்** என்று எண்ணுகிறவன்.

❖ நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நியாயம் தீர்க்கப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

இயேசுகிறிஸ்து தம்முடைய மாமிசத்தைப்புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ணும் படியாகக் கூறியதை **யோவான் 6 : 50 - 66** வரையிலான வேதப் பகுதியில் காணலாம்.

- **இது திருவிருந்திற்கான உபதேசம் அல்ல.** (யோவான் 6 : 53 – 56)
- இயேசுகிறிஸ்துவின் சீஷரில் அநேகருக்கு இது **கடினமான உபதேசமாய்த்** தோன்றிற்று.
- **யோவான் 6 : 66**
  இயேசு கிறிஸ்துவின் **சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல்** பின் வாங்கிப்போனார்கள்.

❖ பழைய ஏற்பாட்டுப்பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்திலே மாமிசத்தை அதின் இரத்தத்துடனே புசிக்கக்கூடாது (லேவியராகமம் 17 : 14)

❖ மாமிசத்தை அதின் இரத்தத்துடன் புசிப்பவன் எவனும் அறுப்புண்டு போவான் என்பது **இஸ்ரவேல் புத்திரருக்கான** கட்டளையாகும். (லேவி 17 : 14)

ஆகவே, இயேசுகிறிஸ்து தம்முடைய மாமிசத்தைப்புசித்து, **இரத்தத்தைப் பானம் பண்ணும் படி கூறியது, கடினமான உபதேசமாய் தோன்றியது.**

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளையும், அதில் மறைந்துள்ள அர்த்தங்களையும் அறியாதவர்களுக்கு இது கடினமான உபதேசமேயாகும்.

❖ இங்கு, பழைய ஏற்பாட்டுக்குரியவர்களைப் புது உடன்படிக்கைக் குரியவர்களாக **அழைக்கப்படும் போது :**
புது உடன்படிக்கைக்குரியவர்களோ, **நியாயப்பிரமாணப் போதகர்களாய் மாறிப் போனார்கள்.** (கலாத்தியர் 2:4)

❖ இவர்கள் பழைய **இரசத்தைக் குடித்து, புது இரசத்தை விரும்பாதவர்கள்.** (லூக்கா 5 : 39)

இதனாலேயே,
- பல சபைகள் பிரிந்தன.
- பல சபைகள் பெருகின.
- பல சபைகளில் சத்தியம் அவமாயிற்று

| புது இரசத்தைப் புதுத்துருத்தியிலே வார்க்க வேண்டும்! |
|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III

**வார்த்தை - தேவன் (யோவான் 1:1)**

மாமிசமாகியது

| மண் (மாமிசம், இரத்தம்) | தண்ணீர் | காற்று (ஆவி) |
|---|---|---|

**பரிசுத்தமாகுதல்**

| (இரத்ததினால் பரிசுத்தம்) | (தண்ணீரால் பரிசுத்தம்) | (ஆவியினால் பரிசுத்தம்) |
|---|---|---|
| 1 யோவான் 1:7 | எபேசியர் 5:26 | ரோமர் 15:15 |
| வெளிப்படுதல் 1:6 | எபிரேயர் 10:22 | தீத்து 3:5 |
| எபிரேயர் 13:12 | எசேக்கியேல் 36:25 | 1 கொரி 6:11 |

(அ) வார்த்தை மாமிசமாகியது அல்லது தேவன் மாமிசத்திலே வெளிப்பட்டார் என்று வேதாகமம் சாட்சியிடுகின்றது. *(யோவான் 1 : 14) (1 திமோ 3 : 16)*

இங்கு வார்த்தை மாமிசமாகியது என்னும் போது,

- வார்த்தை ⟶ இரத்தமாகியது. *(1 யோவான் 5 : 6)*
- வார்த்தை ⟶ ஜலமாகியது *(1 யோவான் 5 : 6)*
- வார்த்தை ⟶ காற்றாகியது (பரிசுத்த ஆவி) *(மத்தேயு 1 : 20)*

ஆகவேதான்,

❖ **வார்த்தையினாலே** மனிதனுக்குள் **பரிசுத்தம்** உண்டாவதைப் போன்று, *(யோவான் 17 :17) (1 திமோத்தேயு 4 : 5) (சங்கீதம் 119 : 9)*

இயேசுவின் **இரத்தத்தினால்** பரிசுத்தம் உண்டாகின்றது. *(1 யோவான் 1 : 7) (வெளி 1 : 6) (எபிரேயர் 9 : 26)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயேசுவின் இரத்தத்தினால்** →

- பாவமன்னிப்பு (எபேசியர் 1 : 7)
- சுத்திகரிப்பு (எபிரேயர் 9 : 14)
- கழுவப்படல் (வெளி 1 : 6)
- பரிசுத்தமாக்கப்படல்
- நீதிமானாக்கப்படல் (ரோமர் 5 : 9)
- மீட்பு (வெளி 5 : 9)
- ஜெயம் (வெளி 12 : 11)

என்பவைகள் **வார்த்தையாகிய இரத்தத்தினால்** நடைபெறுவதாய் வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**(ஆ) எபேசியர் 5 : 30**

**நாம்** அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாமிசத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கின்றோம்.

இவ்வேதப்பகுதியில் **மாமிசமும், எலும்பும்** என்பதை 3 விதமான விளக்கங்களுக்குரியதாகக் காணலாம்.

(i) **எலும்பு** என்னும் போது **எலும்பு மச்சையில்** இருந்து **இரத்தம்** உண்டாவதினால்:
**இரத்தத்தைக் குறிக்கும் அடையாளமாகவும் பொருள்கொள்ளலாம்.**
ஆகவே:
திருவிருந்தின் ஒழுங்கின்படி **மாமிசமும் இரத்தமும்** வார்த்தையைக் குறிப்பதனால்:
❖ **நாம்** இயேசுவுடைய **வார்த்தைக்குரியவர்கள்** ஆகின்றோம்.

(ii) **எலும்பில்** இருந்து **இரத்தம்** உண்டாவதைப் போன்று : இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசுகின்றது. (மத்தேயு 12 : 34 ) **இரத்தம்,** வார்த்தையாய் இருப்பதனால் இங்கு, **எலும்பு** என்பது **இருதயத்தை,** அல்லது **எலும்பு** என்பது **ஆத்துமாவை** குறிக்கின்றது.

மாமிசம் என்பது – சரீரத்தையும் (கிரியைகள்)
எலும்பு என்பது – ஆத்துமா (சித்தங்கள்) எனவும் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நாம் இயேசுவுடைய **சித்தத்தின்படியான கிரியைகள்** செய்ய வேண்டும்.

(iii) ஆதி 2 : 23 ல் ஆதாரம் : இவள் என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமுமாயிருக்கிறாள் : இவள் மனுஷனில் இருந்து எடுக்கப்பட்ட படியால் மனுஷி எனப்படுவாள் என்றாள்.

இவ்வாறே,
நாமும் இயேசுவுடைய (பிந்திய ஆதாம்) மாமிசத்திற்கும் , எலும்புக்கும் உரியவர்களாயிருக்கிறோம். என்னும் போது,

❖ நாம் இயேசுவுடைய **மணவாட்டி**யாவதற்கு உரியவர்கள்.

ஆகவே எபேசியர் 5 : 30 ன்படி.
மாமிசத்திற்கும் எலும்புக்கும் உரியவர்கள் என்பது.

- **இயேசுவின் வார்த்தைக்குரியவர்கள்**
- **இயேசுவின் சித்தம் செய்கிறவர்கள்**
- **இயேசுவின் மணவாட்டியாக தகுதியுள்ளவர்கள்**

❖ **இயேசுவின் வார்த்தையை ஏற்றுக்கொண்டு தேவசித்தம் செய்பவனே மணவாட்டியாவான்** என்னும் ஆழமான சத்தியத்தை கண்டு கொள்ளலாம்

**தேவசித்தம் செய்யாதவன் மதியற்றவன்**

சத்தியத்தைச் சத்தியத்தின்படி அறிந்துகொண்டு அதைக் கைக்கொண்டு நடக்கும்போதே பலன் கொடுக்கிறதாய் இருக்கிறது. இல்லாவிடில்:

வேதத்தைக் கேளாதபடி
தன் செவியை விலக்குகிறவனுடைய
ஜெபமும்
அருவருப்பானது

**அருவருப்பு தேவனை தூரப்போகப்பண்ணும்.**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑥

# பரிசுத்தமாகுதலின் இரகசியம்

**"நான் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் பரிசுத்தமாயிருங்கள்"** *(லேவியர்ஆகமம் 19:2) (1 பேதுரு 1:16)*

பரிசுத்தவேதாகமத்தை நேசிக்கின்ற ஒவ்வொருதேவபிள்ளையும், அல்லது ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன் தேவனைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டியது இதுவே!

இதனையே அப்.பவுல்: **"நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார்** என்று அறிவேன் என்று அறிக்கையிட்டார் இது நமக்கும் பொருத்தமானதே"

தேவன் : **நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும்** மனுஷனை உண்டாக்குவோமாக..... என்றார். *(ஆதியாகமம் 1:26)*

தேவன் தம்முடைய **சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்.** *(ஆதியாகமம் 1:27)*

**சுத்தம்** என்பது ஆலயத்திற்கு செல்லும்போது குளித்து, கால்களைக் கழுவிச் செல்வது, **மனிதஞானத்தில்** தோன்றிய மதங்களின் கட்டளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தம் என்பது.

- தேவனுடைய சாயல்.
- தம்மைப்போல மாறும்படியான அழைப்பு.
- நாமம் பரிசுத்தமுள்ளவர் பின்வைத்துப்போன அடிச்சுவடு.

**பழைய ஏற்பாட்டின் பரிசுத்தமாகுதல்.**

(i) நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர், ஆகையால், தரையில் ஊருகிற எந்தப்பிராணிகளிலும் **உங்களைத் தீட்டுப் படுத்தாமல்** உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு **பரிசுத்தராயிருப் பீர்களாக.** (லேவியராகமம் 11:41-44)

- இங்கு **தரையில் ஊருகிறவைகளால் தீட்டுப்படலாகாது** (லேவி 11:31) (லேவி 11:41) என்பது **சாதாரண அர்த்தத்தில்** தெரிந்தாலும்,
- **தரையில் ஊருதல்** என்பது **பூமி (மண்)க்குரியவைகளை** மாத்திரம் தேடுதல் அல்லது **உலகத்தால் கறைபடுதல்** என்னும் **ஆவிக் குரிய அர்த்தத்திலும்,**
- **பரிசுத்தப்படுத்தல்** என்பது **சரீரத்தைதேவனுக்குப் பிரியமான பலியாக** ஒப்புக்கொடுக்க வேண்டும் என்னும் **இரகசிய அர்த்தத் தையும்** உடையது ஆகும்.

**இது சரீரத்தில் பரிசுத்தம்.**

(ii) நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை **எகிப்து தேசத்தி லிருந்து வரப்பண்ணின** கர்த்தர், நான்பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களா? (லேவியராகமம் 11:45)

- இங்கு **எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின** என்பது சாதாரண அர்த்தத்தில் தெரிந்தாலும்.
- எகிப்து என்னும் **பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து** மீட்கப் பட்டதைக் குறிக்கும் **ஆவிக்குரிய அர்த்தத்திலும்.**
- **பரிசுத்தப்படுத்தல்** என்பது **எண்ணங்களில், சிந்தைகளில் நினைவுகூர்ந்து** பரிசுத்தப்படவேண்டும் என்னும் **இரகசிய அர்த்தத்தை** உடையது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது ஆத்துமாவில் பரிசுத்தம்.**

(iii) நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் **சொல்லவேண்டியது** என்னவென்றால், உங்கள் தேவனும் கர்த்தருமாகிய **நான் பரிசுத்தர்,** ஆகையால் **நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.**

*(லேவியராகமம் 19:2)*

- **தேவன் பரிசுத்தர் என்று சொல்லவேண்டும்** என்பது சாதாரண அர்த்தத்தில் தெரிந்தாலும்,
- கர்த்தர் பரிசுத்தர் என்று சொல்லும் **வாயின் உதடுகளிலிருந்து யாதொருதூஷணமும் பிறக்கலாகாது** என்னும் **ஆவிக்குரிய அர்த்தத்திலும்,**
- **பரிசுத்தப்படுதல்** என்பது **வாயின் வார்த்தைகளில் குற்றமற்ற வர்களாயிருக்க** வேண்டும் என்னும் **இரகசிய அர்த்தத்தையும்** உடையது ஆகும்.

**இது ஆவியிலே பரிசுத்தம்**

ஆகவே பழைய ஏற்பாட்டின் பிரமாணங்களுக்கான கட்டளை களிலும் மனிதன் தனது ஆவி -ஆத்துமா- சரீரம் என்பவற்றில் பரிசுத்த மாகுதல் அடையவேண்டும் என்பது மறைபொருளாயிருந்தது.

**புதிய ஏற்பாட்டின் பரிசுத்தம்**

(i) நான் பரிசுத்தர், ஆதலால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் *(1 பேதுரு 1 : 16)*

(ii) சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்த மாக்குவாராக. உங்கள் **ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும்,** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. *(1 தெசலோனிக்கேயர் 5 : 23)*

- நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் பரிசுத்தப்படவேண்டும் என்பதும், ஆவி - ஆத்துமா சரீரம் காக்கப்படவேண்டும் என்பதும் **தேவ கட்டளையாகும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆவி ஆத்துமா சரீரத்தில் பரிசுத்தப்படுதல் என்பது வருகையில் எடுத்துக்கொள்ளப்பட **தகுதியாகும்.**
- **ஆவி** என்பது **வார்த்தைகளில் பரிசுத்தம்.**

**ஆத்துமா** என்பது **எண்ணங்களில் பரிசுத்தம்.**

**சரீரம்** என்பது **கிரியைகளில் பரிசுத்தம்.**

இதுவே பரிசுத்தமாகுதலின் **அடையாளமாகும்.**

## தேவ வார்த்தையினால் பரிசுத்தம்.

- இது **அடிப்படைச் சத்தியமாகும்.**
- வேதத்தை வாசிக்கும் போதே தெளிவாகும் **சாதாரண அர்த்தமுள்ளது.**
- பலவேத இரகசியங்களை **திறக்கும் சாவி.**

## அடிப்படைசத்தியத்தின் ஆதாரம்.

(i) ***சங்கீதம் 119 : 9***

வாலிபன் **தன் வழியை** எதினால் சுத்தம் பண்ணுவான்? **உமது வசனத்தின்** படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே.

(ii) ***யோவான் 17 : 17***

உம்முடைய **சத்தியத்தினாலே** அவர்களைப் **பரிசுத்தமாக்கும்,** உம்முடைய **வசனமே சத்தியம்.**

(iii) ***1 திமோத்தேயு 4: 4-5***

தேவன்படைத்தவைகள்..... அது **தேவவசனத்தினாலும்,** ஜெபத்தினாலும் **பரிசுத்தமாக்கப்படும்.**

மேலேயுள்ள மூன்று வேதவசனங்களும் **தேவனுடைய வார்த்தையினால் பரிசுத்தப்படமுடியும்** என்ற **அடிப்படைச்சத்தியத்தையும், வாசிக்கும் போதே தெளிவாகும் சாதாரண அர்த்தமுள்ளது** என்பதற்கான ஆதாரங்களுமாகும்.

## இரகசியங்களைத்திறக்கும் சாவி.

- புதிய ஏற்பாட்டிலே இயேசுகிறிஸ்துவே **சத்தியம்.** (யோவான் 14:6)
- இயேசுகிறிஸ்துவுடைய வசனங்கள் **ஆவியாயிருக்கிறது.** (யோவான் 6: 63)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இயேசுகிறிஸ்துவுடைய நாமம் **தேவனுடைய வார்த்தை.** (வெளி 19 :13)

**1 கொரிந்தியர் 6:11** உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய **இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும்**

(1) **கழுவப்பட்டீர்கள்,**
(2) **பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்**
(3) **நீதிமானாக்கப்பட்டீர்கள்.**

● இயேசுகிறிஸ்துவின் **நாமத்தினால்** என்பதை **உணரவேண்டும்.** அவருடைய நாமம் என்ன? (நீதி 30 : 4)
**தேவனுடைய வார்த்தை** என்பதாகும். (வெளி 19 : 13)

**தேவ வார்த்தையே** நம்மைக் கழுவி - **பரிசுத்தப்படுத்தி** - நீதிமானாக்கிறது.

● **தேவனுடைய ஆவி** என்பதும் **தேவனுடைய வார்த்தையை** குறிக்கும். (யோவான் 6 : 63) நம்மைக்கழுவி - பரிசுத்தப்படுத்தி -நீதிமானாக்கும் **வல்லமை** (சக்தி) வார்த்தைக்கே உண்டு.

**வார்த்தை மாமிசமாகியது.**

● மனிதன் மண்ணும், தண்ணீரும், காற்றும் கலந்தகலவையாகும். மண் என்பது சரீரத்தையும், சரீரம் என்பது மாமிசம், இரத்தம் சேர்ந்த பகுதி என்னும் அடிப்படைச்சத்தியத்தை உணரவேண்டும்.

● வார்த்தையானவர் மனிதனாக வெளிப்பட்டார் என்னும் போது இயேசுவும் மண்ணும், தண்ணீரும், காற்றும் கலந்தகலவையாகவே வெளிப்பட்டார்.


(இதனை அவரது பிறப்பிலும், இறப்பிலும் உறுதிப்படுத்தும் **ஆதாரங்கள் உண்டு. பிறப்பில்** - 1 யோவான் 5 : 6, மத்தேயு 1 : 18, லூக்கா 1:35 **சிலுவை மரணத்தில்,** மத்தேயு 27 : 50, யோவான் 19 : 34 , யோவான் 19 : 30.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீர்க்கால்கள்** நூலின் **மனிதசிருஷ்டிப்பின் இரகசியம்** என்றகட்டுரையில் மேலும் ஆதாரங்களையும், ஆழங்களையும் காணலாம்.)

- (i) வார்த்தை மாமிசமாகியது. } (சரீரம்)
  வார்த்தை இரத்தமாகியது. }
  (ii) வார்த்தை ஜலமாகியது (ஆத்துமா)
  (iii) வார்த்தை காற்றாகியது (ஆவி, பரிசுத்தஆவி)




## வேதாகமத்து ஆதாரங்கள்:

❖ **இரத்தத்தினால் பரிசுத்தமாகுதல்.**

(i) ***1 யோவான் 1 : 7*** **இயேசுகிறிஸ்துவின் இரத்தம்** சகலபாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

**இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்பது வார்த்தையாகும்.** வார்த்தையினாலே நாம் சுத்திகரிக்கப்படுகின்றோம். வார்த்தையை **இருதயத்துக்குள்** ஏற்று நமது வார்த்தையிலும், நமது கிரியைகளிலும் வெளிப்படுத்த வேண்டும்.

(ii) **வெளிப்படுத்தல் 1 : 6** நம்மில் அன்புகூர்ந்து **தமது இரத்தத்தினாலே** நம்முடைய **பாவக்கறைகளை கழுவி** தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை **ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கிய** அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றைக்கும் உண்டாயி ருப்பதாக ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுகிறிஸ்துவின் **இரத்தமாகிய வார்த்தையின்படி** நம்வாழ்க்கையை ஒப்புக் கொடுத்து ஆவி ஆத்துமா சரீரம் பரிசுத்தப்படும்போதுதான்.

**நாம் ராஜாக்கள்.**

**நாம் ஆசாரியர்கள்.**

அத்துடன் ரோமர் 5 : 9ன்படி

**நாம் நீதிமான்கள்.** என்ற சத்தியத்தை அறிவோம். (1 கொரி 6 : 11)

**இயேசுவின் இரத்தம்** என்பது **வார்த்தை என்ற இரகசியத்தை கண்டு கொள்ளும் போது,**

**இரத்தத்தினால் :**

- சுத்திகரிக்கப்படல்.
- கழுவப்படல்.
- பரிசுத்தமாக்கப்படல்.
- இராஜாக்களாக்கப்படல்.
- ஆசாரியனாக்கப்படல்.
- நீதிமான்களாக்கப்படல்.

என்பவைகளாவன **வார்த்தையினால்** நடைபெறுகிறது என்பதையும். **இயேசுவின் இரத்தம்** என்பது **வார்த்தை என்பதன் குறியீடு.** என்பது புரியும்.

❖ **இதனைப் புரியாவிட்டால் நமக்கும் இதுகடினமான உபதேசம் ஆகும்.**

(iii) **எபிரேயர் 9 : 19 - 22**

இவைகளின் **இரத்தத்தை** புத்தகத்தின்மேலும் ஜனங்களின் மேலும் **தெளித்து,**

தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட **உடன்படிக்கையின் இரத்தம்** இதுவே என்று சொன்னான்.

**எபிரேயர் 9 : 22 ல் நியாயப்பிரமாணத்தின்படி** கொஞ்சம் குறைய **எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்** (எபிரேயர் 9 : 13)

மோசேயினால் கட்டளையிடப்பட்ட மறைபொருள், புதியஏற்பாட்டில் வெளியரங்கமாகி, **இரத்தம்** என்பது இயேசுகிறிஸ்துவின் பலியினால் சித்தப்படும் **புது உடன்படிக்கை** என்பதன் உண்மையையும் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜலத்தினால் (தண்ணீரினால்) பரிசுத்தமாகுதல்.

(i) *எபேசியர் 5 :26*

சபையைத் **திருவசனத்தைக்** கொண்டு, **தண்ணீர்** முழுக்கினால் சுத்திகரித்து, **பரிசுத்தமாக்குகிறதற்கும்.**

இவ்வேதவசனத்திலே **திருவசனம்** என்பது **தண்ணீர்** என்பதையும், தண்ணீர் முழுக்கின் சுத்திகரிப்பு என்பது, **தண்ணீரினால் பரிசுத்த மாகுதல்** என்பதை சாதாரண அர்த்தத்தில் விளங்கிக் கொள்ளலாம். (எண்ணாகமம் 8 : 7)

(ii) **எபிரேயர் 10 : 22**

துர்மனசாட்சி நீங்கத் **தெளிக்கப்பட்ட** இருதயம் உள்ளவர்களையும், **சுத்தஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்.**
இங்கும் **சுத்தஜலம்** என்பது சரீரத்தைக்கழுவி பரிசுத்தப்படுத்துகின்றது என்னும் சாதாரண அர்த்தமானதாக விளங்கினாலும்,
**திருவசனத்தினால்** அல்லது **திருவசனமாகிய தண்ணீரினால்** பாவங்கள் போகக் கழுவப்படுதல் என்னும் **கடந்த காலப்பாவங்கள்** மன்னிக்கப்படுதலை குறிக்கும் ஆவிக்குரிய அர்த்தத்தையும் உடையது.
**தெளிக்கப்பட்ட இருதயம்** என்பது வார்த்தையினால் இருதயம் நிரம்புவதை குறிக்கும் என்பதாகும்.

❖ இவ்வேதவாக்கியத்தின் மறைபொருளே ஜலத்தினாலும் ஆவியினாலும் ஞானஸ்நானம் என்பதாகும். மேலும் ஆதாரமாக.

(iii) **எசேக்கியேல் 36 : 24- 27ல்**

- நான் உங்களை புறஜாதிகளிடத்தில் இருந்து அழைப்பையும்.
- நான் உங்கள்மேல் சுத்தஜலம் தெளித்து சுத்திகரிப்பதையும்.
- உள்ளத்திலே புதிதான ஆவியைக்கட்டளையிடுவேன் என்பதையும் காணலாம்.

ஆகவே, **தண்ணீரில் பரிசுத்தமாகுதல்** என்பது இயேசுவுடைய **வார்த்தைகளினால் பரிசுத்தமாகுதல் என்பதன் இரகசியமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவியினால் பரிசுத்தமாகுதல்.**

(i) 2 தெசலோனிக்கேயர் 2 : 13
கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் **ஆவியினாலே பரிசுத்த மாக்கப்படுகிறதினாலும்,**

இங்கும் **ஆவியினால்** பரிசுத்தமாகுதல் என்பது **வார்த்தையினால் பரிசுத்தமாகுதலை குறிக்கும், இயேசுவுடைய வார்த்தை ஆவியாயி ருக்கிறது** (யோவான் 6 : 63) ஆகவே, **வார்த்தையே பரிசுத்த மாக்கும்** என்னும் அடிப்படைச் சத்தியத்தினாலும் புரிந்து கொள்ளலாம்

(ii) 1 கொரிந்தியர் 6 :11 இலும் நீங்கள் **தேவனுடைய ஆவியினாலே** பரிசுத்தமாக்கப்பட்டு என்பது தேவ வார்த்தையால் பரிசுத்தமாக்கப் படல் என்பதையும்

(iii) தீத்து 3:5 ல், மறுஜென்ம முழுக்கினாலும், **பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் என்பதில்**

இங்கு புதிதாகுதல் என்பது பழையவை கழித்து புதுதிராட்சை இரத்தத்தால் நிரப்பப்படுவது போன்று. இயேசுவுடைய புது உடன்படிக்கைக்குள்ளாவதை குறிக்கும்.

**வார்த்தை மாமிசமாகியது என்பதன்மூலம்.**

- வார்த்தையாகிய இரத்தத்தினால் பரிசுத்தம்.
- வார்த்தையாகிய தண்ணீரினால் பரிசுத்தம்.
- வார்த்தையாகிய ஆவியினால் பரிசுத்தம்.

என்னும் மறைபொருளின் ஆவிக்குரிய இரகசியமானது கண்களைத் திறக்கட்டும்!
வார்த்தையின் சத்தியம் விடுதலையாக்கட்டும்!!

**பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

# முத்திரிக்கப்பட்ட கைகளின் இரகசியம்

- ❖ **நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய்** உண்டாக்கப்பட்ட படியால், உம்மைத் துதிப்பேன் (சங்கீதம் 139 :14) என்று சங்கீதக்காரன் ஒரு ஆழமான வெளிப்பாட்டை அல்லது ஆழமான ஒரு சத்தியத்தை வெளிப்படுத் தியுள்ளான்.
- ❖ தேவனைக்குறித்து அறியப்படுவது **அவர்களுக்குள்ளே** வெளிப் பட்டிருக்கிறது, (ரோமர் 1:19) என்ற வேத வாக்கியமும், **உண்டாக்கப் பட்டிக்கிறவைகளினால்** நமக்குள்ளே தேவனைக்குறித்து அறியக் கூடிய காரியங்களை வைத்துள்ளார் என்று சாட்சியிடுகின்றது.
- ❖ தேவன் **தமது சித்தத்தின்படி** அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் (1கொரிந்தியர் 12:18) என்பதாயும் வார்த்தை உறுதிப்படுத்துகிறது.

வேதாகமம் உறுதிப்படுத்துகின்ற இக்காரியங்கள் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் விசுவாசத்தை வளர்க்கவும், சத்தியத்தின் ஆழங்களை அறிந்து கொள்வதற்கும் ஆதாரமாக **மூன்று காரியங்கள் மாத்திரம்** வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதாரம் - 01:**

அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் **நனைத்தது,** தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் **பூமியின் மண்ணினால்** உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் **நாசியிலே ஊதினார்** அவன் ஜீவாத்துமாவானான். (ஆதியாகமம் 2 : 6-7)

(**நனைந்தமண்** என்பது **தண்ணீர் கலந்த மண்** என்பதனையும், **மண்** என்பது மாமிசமும் இரத்தமும் சேர்ந்த சரீரத்தையும் குறிக்கும்.)

❖ மனிதனது சரீரத்தில் **இரத்தம் - தண்ணீர் - காற்று இம்மூன்றும்** சுத்திகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தேவன் **நியமித்தபாதையிலே,** தேவன்நியமித்த **பிரமாணத்தின் அளவில்** இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பிரமாணத்தின் அளவு கூடுதல் (+) அல்லது குறைதல் (-) சரீரத்தில் நோயை உண்டாக்கும்.

❖ சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது. **தேவனுடைய ஆலயமும்** சரீரத்தைப்போன்றே **தேவனுடைய கட்டளைகளின்படியே** இயங்க வேண்டும். அங்கும் தேவனுடைய **கட்டளைகளைக் கூட்டுதல்** அல்லது குறைத்தல் தேவனால் எச்சரிக்கப்படுகிறது. (உபாகமம் 12 : 32) (நீதிமொழிகள் 30 : 6) (வெளிப்படுத்தல் 22 : 18- 19)

❖ இங்கு **காற்று, தண்ணீர், இரத்தம்** என்பவைகள் முறையே ஆவி. ஆத்துமா சரீரம் என்பவற்றைக் குறிக்கும் **ஆவிக்குரிய அடையா ளங்களாகும்.**

மனிதனுடைய **ஆவி ஆத்துமா சரீரம்** பரிசுத்தப்பட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்ற இரகசியத்தையும் குறிக்கும்.

கர்த்தாவே. **என் வாயின் வார்த்தைகளும், (ஆவி)**
**என் இருதயத்தின் நினைவுகளும், (ஆத்துமா)**
**என் அவயவங்களின் கிரியையும். (சரீரம்)**

உமக்குப் பிரியமானதை செய்ய உம்பாதையிலே வழிநடத்துவீராக!

**"உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பி பரிசுத்தப்படுவோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் - 02

என் கால்களைத் தொழுவடித்துப் போட்டு, **என் வழிகளையெல்லாம் காவல் பண்ணுகிறீர், என்காலடிகளில் அடையாளத்தைப் போடுகிறீர்.** (யோபு 13 : 27)

❖ தேவன் மனிதனது காலடிகளில் அடையாளத்தைப் போட்டுள்ளார் என்ற வேதாகமத்துச் சத்தியத்தை விஞ்ஞானமும் ஆராய்ந்து அங்கீகரித்துள்ளது. தொலைந்து போன மனிதனின் **காலடையாளத்தை** நாய்கள் **மோப்பம் பிடித்து** உண்மையை உறுதிப்படுத்தியுள்ளன.

❖ காலடியில் **அடையாளத்தைப் போட்டவர்,** நம்நடைகளையும் **எண்ணி வைத்திருப்பார்** அல்லவோ? (யோபு 14:16)

❖ **காலடியின் அடையாளம்** என்பது நம் **நடைகளைக் காத்துக்கொள்ள வேண்டியகாவல்** என்பதை எண்ணி எச்சரிப்படைய வேண்டும். (யோபு 13:27) (யோபு 33:11)

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளுக்கும்,
**கட்டளையிடப்பட்ட நடைகள் உண்டு.**
**காத்துக்கொள்ள வேண்டிய நடைகள் உண்டு.**
**விலக்கவேண்டிய நடைகள் உண்டு.** என்பதனை அறியக்கடவோம்.

- என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர், என்கண்ணீரையும், உமது துருத்தியில் வையும், அவைகள் **உமது கணக்கில் அல்லவோ இருக்கிறது.** (சங்கீதம் 56:8)

தேவனுடைய வார்த்தைக்காகப் பிரயாசப்பட்டு **அலைகின்ற** ஒவ்வொருவருக்கும் ஆறுதல் அளிக்கும் **தேவவசனம் இதுவாகும்.**

- நம்முடைய **அலைச்சல்களைத் தேவன் எண்ணுகின்றார்** என்பதும் **நடைகள் அவர் கணக்கில் இருக்கின்றது என்பதும்** ஆகும்.

- **என்காலடிகள் வழுவாதபடி,** என் **நடைகளை** உமது **வழியில்** ஸ்திரப்படுத்தும் என்பது நம் ஜெபமாக அமையட்டும்.

**தேவனுக்கான அலைச்சல்கள் அவர் கணக்கில் பெருகட்டும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அடையாளங்கள் என்பது **கோடுகளாக** அல்லது **வரிகளாக** நமது சரீரத்திலே **மூன்று இடங்களில்** அமைந்துள்ளன,

- **தலையில் அடையாளம்.**
- **காலடியில் அடையாளம்.**
- **கைகளிலே அடையாளம்.**

கைகளிலும் கால்களிலும் **கோடுகள்** அல்லது **வரிகளைக்** கடந்த இரகசியமும் உண்டு)

**ஆதாரம் - 03:**

தாம் உண்டாக்கிய **சகலமனுஷரும் தம்மை அறியும்படி** அவர் சகல மனுஷருடைய **கைகளையும்** முத்திரித்துப்போடுகிறார். (யோபு 37:7)

- மனிதனுடைய **கைகளிலுள்ள வரிகளை** விஞ்ஞானம் அறிந்து அங்கீகரித்து, நடைமுறைப்படுத்தியுள்ளது நாம் அறிந்தவையே.
- இரட்டையரின் கைகளில்கூட **கைவரிகள் மாறுபட்டுள்ளது** என்பது கூட விஞ்ஞானத்தை வியப்பில் ஆழ்த்தி, **சகலமனுஷரும்** தம்மை உண்டாக்கியவரை அறிந்துகொள்ளும்படி வைத்த அடையாளங்களாகும்

**இது வேதாகமம் கற்றுக் கொடுத்த விஞ்ஞானம் ஆகும்.**

❖ **கண்களுக்கு வெளியரங்கமாயிருந்தும் ஆவிக்குரியவர்கள் பலர் அறியாமல்போன ஆழமான இரகசியம் இந்தக்கைகளுக்கு உண்டு.**

**அது முத்திரித்த கைகளுக்குள் மூடிக்கிடக்கும் விரல்களின் இரகசியமாகும்.**

**விரல்களின் இரகசியம் :**

(வேதாகமத்துச் சம்பவங்களின் அடிப்படையில் புரிந்து கொள்ளப் படவேண்டிய ஆழமான காரியமாகும்)

தேவனாகிய கர்த்தர் **முதல் மனிதனைச் சிருஷ்டித்தபோதே** தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலேவைத்தார் (1கொரிந்தியர் 12:18) என்னும் போது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனிதனது கைவிரல்கள்கூட தேவனுடைய சித்தத்தின்படியே, நம்முடைய சரீரத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை உணரவேண்டும்.
- இங்கு **பத்துவிரல்கள்** என்பது தேவனுடையசித்தத்தை கிரியையிலே வெளிப்படுத்தப்பட்ட **தேவபிரமாணம்** ஆகும்.
- இது **மனித சரீரத்தின் மாறாப்பிரமாணம்.**

**மாமிசமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்** இனம் - மொழி - மதம்- ஜாதி- நிறம் கடந்து **தன்னைப் படைத்தவரை** அறிந்து கொள்ளும் படி வைத்த **மறைபொருளை,**
பரிசுத்த வேதாகமத்திலே புதையல்கள் தேடுவதுபோல தேடும்பொழுது, **பத்து விரல்கள்** என்பது **பத்துக்கட்டளைகளை** நினைவுபடுத்தும் **தேவனுடைய பிரமாணம்** என்பதை கண்டடையலாம்.

❖ **கட்டளைகள்** அல்லது **பிரமாணங்கள்** என்பது மனித இனம் பூமியில் நடப்பதற்கு **தேவன் நியமித்தபாதை** அல்லது **தேவன் நியமித்தவழி** ஆகும் **இக்கட்டளைகளே நமக்கு.**

- **பாவம்** என்னவென்று காட்டும் **கண்ணாடி,**
- **நல்லவன் - கெட்டவன்** என்பதை வகையறுக்கும் **சட்டம்**
- **இருதயத்தில்** எழுதப்பட்ட **தேவயாப்பு.**

**உலக மக்கள் அனைவருமே** இச்சட்டத்தின் ஒழுங்கிலே இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அடையாளம் காணலாம்.

❖ **இருதயத்தில் எழுதப்பட்டுள்ள இந்த தேவயாப்பினை** வாழ்க்கையில் **கைக்கொள்ளுவதற்கும்,** வாழ்கையில் **நடப்பதற்கும்** அடையாளமாக கைகளிலும், கால்களிலும் **நினைப்பூட்டும் குறியீடாக** இவ்விரல்கள் அமைந்துள்ளன.

**ஆதாரமாக** வேதாகமத்துச் **சம்பவங்கள்** உறுதிப்படுத்துகின்றன. மறைவான ஆவிக்குரிய யுத்தமொன்றும் இடம் பெற்றதைக் காண **ஆவிக்குரிய கண்களும் திறக்கப்பட வேண்டும்.**

தேவன் **தமது பிரமாணத்தை** மனிதனுக்குக் கொடுத்த காலங்களை வேதாகமத்தின் அடிப்படையில் **மூன்றாகக் காணலாம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஆதாம் ⟶ உடன்படிக்கை ⟶ **மனச்சாட்சியின் காலம்.**
❖ மோசே ⟶ உடன்படிக்கை ⟶ **நியாயப்பிரமாண காலம்.**
❖ இயேசு ⟶ உடன்படிக்கை ⟶ **புதுஉடன்படிக்கை காலம்.**

**1. மனச்சாட்சியின் காலம்.**

(இது **ஆதாம்** முதல் **மோசே** வரையிலுமானகாலம்)

மண்ணும், தண்ணீரும் கலந்த கலவையாக **ஆதாமை** உருவாக்கி, அவனுக்குள் தனது ஜீவனை (வார்த்தையை) ஊதியபொழுது, அவனுடைய ஆத்துமாவில் வெளிச்சம் உண்டாகியது. **அவன் ஜீவாத்துமாவானான்.**

**ஜீவன்** மனுஷருக்கு ஒளியாயிருந்தது (யோவான் 1:4) அந்த ஒளியானது இருளைப் பற்றிக்கொள்ளாதவாறும், நடைபிசகாதபடிக்கும், பாதைக்கு வெளிச்சமாயிருந்தது.

**ஆதாம் மீறிய உடன்படிக்கை.** (ஓசியா 6:7) (யோபு 31:33) (ஏசாயா 43:27)

- **தேவன் ஒருவரே என்ற கட்டளையை மீறினான்.**
  (அவருடைய கட்டளையில் நடப்பதே அன்பு என்பதை மீறி, **சர்ப்பத்திற்குச் செவிகொடுத்து** விலகிப்போனான்)

- **தேவன் விலக்கியகனி விக்கிரகமாயிற்று.**
  (தேவனுடைய கட்டளையை மீறியபோது தேவன் விலக்கியகனிக்கு முக்கியத்துவம் கொடுத்தபோது பிரிவு உண்டாயிற்று)

- **தேவனுடைய நாமத்தை வீணாக்கினான்.**
  (தேவன், நீங்கள் சாகாதபடி அதைப்புசிக்கவும், **அதை தொடவும் வேண்டாம்** என்று சொன்னாரென தேவநாமத்தை வீணாக்கினான். (ஆதியாகமம் 3:3))

- **ஓய்வு நாளை மீறினான்.**
  (ஆதாமை ஏதேனுக்குள் அழைத்துவந்து அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். ஆகவே ஆதாமுக்கும் **ஓய்வு நாள் அவசியம்.** (ஆதி 2:15) **ஓய்வு நாளென்பது** சரீரம் ஓய்ந்திருக்கும் நாள்மட்டுமல்ல, **தேவ சமுகத்தில்** இருக்கவேண்டியநாள். **தேவசந்நிதிக்கு விலகி** தோட்டத்தின் விருட்சங்களுக்குள் ஒளிந்து கொண்டான். (ஆதி 3:8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **தகப்பனையும் - தாயையும் கனம் பண்ணாமற்போனான்.**
  (தன்னைச் சிருஷ்டித்தவரைக் கனம்பண்ணாமல் போனான்.)
- **கொலை செய்தான்.**
  (தேவன் விலக்கிய கனியை உண்டு தன் ஆத்துமாவில் மரணத்தை உண்டுபண்ணினான்) (ஆதி *2:17*)
- **விபச்சாரம் செய்தான்**
  (விலக்கப்பட்டகனி **பார்வைக்கு இன்பத்தை தூண்டியதால்** அதைப் புசித்து சரீரத்தை கெடுத்தான்) (ஆதி *3:6*)
- **களவு செய்தான்.**
  (தனக்கு அல்லாத ஒன்றைப் பறித்தான்)
- **பொய் சொன்னான்**
  (தேவன் சொல்லாத ஒன்றை, **தேவன் சொன்னார்** என்றான்) (ஆதி *3:3*)
- **இச்சித்தான்.**
  (தங்களுக்கு விலக்கப்பட்டதை இச்சித்தான்) (ஆதி *3:6*)

ஆதாம் **பத்துக்கட்டளையாகிய உடன்படிக்கையை** மீறிய பொழுது, மோசேயின் நியாயப் பிரமாணம் வரைக்கும் **பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டு கொண்டது.** என்பதை ரோமர் 5:14 ல் காணலாம்.

❖ மாமிசமான யாவரும் பூமியின்மேல் தங்கள்வழிகளை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். (ஆதி *6:12*)

❖ **ஆத்துமாவில் உணர்வடைந்து,** தங்கள் வாழ்க்கையில் கிரியைகளில் வெளிப்படுத்தி கைக்கொண்டு வாழ்க்கையில் நடந்தவர்களே **நீதிமான்கள்** எனப்பட்டார்கள்.
**நோவா** தன்காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானாயிருந்தான் என்பதன் அர்த்தம் இதுவே அதனால் கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்தது.

❖ ஆதாமை வீழ்ச்சியடையச் செய்யும் ஒரு **ஆவிக்குரியயுத்தம்** இடம் பெற்றது என்பதை நாம் உணரவேண்டும்.

ஏனெனில் தேவனுடைய கட்டளைகள் அல்லது பிரமாணங்களில் நம்மை நடக்கவிடாது தடுப்பதே யுத்தத்தின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நியாயப்பிரமாணத்துக் காலம்.

இது மோசே முதல் யோவான் வரையிலுமானது.

மோசேயின் மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரவேலரை தமது ஜனங்களாகத் தெரிந்து கொண்டதேவன். **தமது கட்டளைகளை** (பத்துக்கட்டளை) தேவன் தமது விரலினாலே இரண்டு கற்பலகைகளில் எழுதிக்கொடுத்தார். (யாத்திராகமம் 31:18) (உபாகமம் 9:10) (உபாகமம் 10:4)

- **அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள், கானானுக்குள் பிரவேசிப்பதற்கு சுமக்க வேண்டிய கட்டளையாக இது அமைந்தது.**

- **இங்கு ஆவிக்குரியயுத்தம் வேறுவடிவம் பெற்றது.**

இஸ்ரவேலரைக் கானானுக்குள் பிரவேசிப்பதை தடைசெய்யும் **இராட்சதர்கள்** எழும்பினார்கள்.

இந்த இராட்சதர்களை

- தங்கள் பிதாக்கள் காணாதவர்கள்.
- இஸ்ரவேலர் அறியாதவர்கள்.
- நூதனமாய் தோன்றியவர்கள்.

**இவர்கள்:**

- நெட்டையர்கள்.
- **கைகளில் ஆறு, ஆறு விரல்களை** உடையவர்கள்.
- **கால்களில் ஆறு, ஆறு விரல்களை** உடையவர்கள்.

(2 சாமுவேல் 21:20) (1நாளாகமம் 20 :6)

**இவர்கள்:**

- **தேவபிரமாணத்தை மீறப்பண்ணும் சரீரதோற்றமுடையவர்கள்.**
- **தேவன் தெரிந்து கொண்டவர்களுக்கு அச்சுறுத்தலாயிருந்தார்கள்.**
- **கானானுக்குள் பிரவேசிப்பதற்குத் தடையாயிருந்தார்கள்.**

❖ தாவீதின் கைகளினாலே இவ் **இராட்சதர்கள்** பூமியிலிருந்து அழிக்கப் பட்டார்கள். (2சாமுவேல் 21:22) (1நாளாகமம் 20:8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **மாமிசத்துக்குரிய யுத்தமாக** இதுதெரிந்தாலும், இஸ்ரவேலர் மூலம் தேவன் தனது திட்டத்தை நிறைவேற்றுவதைக்காணலாம். புதிய ஏற்பாட்டில் இது **ஆவிக்குரிய யுத்தத்தின் நிழலாகும்.**

❖ இராஜா யுத்தத்தில் ஜெயிக்கிறவனாயிருக்க வேண்டும் புதிய ஏற்பாட்டில் **இராஜாக்களாகிய நாமும் பொல்லாத ஆவிகளை ஜெயிக்கிறவர் களாயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவும் இராஜாவாக வெளிப் பட்டு யுத்தம் செய்து ஜெயிப்பார் என்பதும் ஆவிக்குரிய இரகசியமாகும்**

**"இராஜாக்களாக யுத்தத்தில் ஜெயிப்போம்"**

இஸ்ரவேலரை வஞ்சித்த **விக்கிரகங்கள் (அந்நிய தெய்வங்கள்)**

**விக்கிரங்கள்:**

- மனித கரங்களால் உருவானவை.
- மனித கற்பனைகளால் உருவானவை.
- மனித ஞானத்தில் தோற்றம் பெற்றவை.

**விக்கிரகங்கள்:**

- பயமுறுத்துபவையாய் இருந்தன.
- பலி செலுத்தவேண்டியதாய் இருந்தன.
- **தேவனுடைய பிரமாணத்தை மீறப்பண்ணும் கைகளையும் உருவ அமைப்பையும்** உடையனவாய் இருந்தன.

ஆகவேதான் **விக்கிரகங்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு** என்று தீர்க்க தரிசிகள் மூலம் தேவன் எச்சரித்தார்.

**"அவைகள் மாயையும், மகா எத்தனமான கிரியையுமாயிருக்கிறது அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்."** *(எரேமியா 10:15) (எரேமியா 51:18) (ஆபகூக் 2:18)*

❖ **தேவனுடைய பிரமாணத்தை மீறப்பண்ணும் விக்கிரங்களுடனும்,** இஸ்ரவேலருக்கு ஆவிக்குரிய யுத்தம் நடைபெற்றது.

❖ இஸ்ரவேலருடைய **பாபிலோன் சிறையிருப்பின் பின்னர்** அவர்களிடம் விக்கிரகம் (வழிபாடு) இல்லாது போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இயேசு கிறிஸ்துவுடைய காலத்திலும் **தேவாலயத்தில் விக்கிரகம்** இல்லை.

**தேவனுடைய கட்டளையை மீறப்பண்ணும் இராட்சதர்களும், விக்கிரகங்களும் சாதாரணமானவைகளாகத் தெரிந்தாலும் நூதனமான முறையில் தேவனுடைய பிரமாணத்தை மீறப்பண்ணி தேவபிள்ளைகளுக்கு சவாலாய் இருந்ததை நாம் கண்டுகொள்ள வேண்டும்.**

## 03. புது உடன்படிக்கையின் காலம்.

புது உடன்படிக்கையின் காலத்திலும் இவ் ஆவிக்குரியயுத்தம் தொடர்வதை வேதாகமம் அறியத்தருகின்றது

- *எபேசியர் 6:12ல்*

  ஏனெனில் மாமிசத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், **இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும். வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்** நமக்குப்போராட்டம் உண்டு.

- 2 கொரிந்தியர் *10:3-5* இலும்

  நாங்கள் மாமிசத்தின்படி நடக்கிறவர்களாயிருந்தும், மாமிசத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.

  எங்களுடைய **போராயுதங்கள்** மாமிசத்திற்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு **தேவ பலமுள்ளவைகளாயிருக்கின்றது. அவைகளால்** நாங்கள் **தர்க்கங்களையும்,** தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகின்ற **எல்லாமேட்டிமையையும்** நிர்மூலமாக்கி, **எந்த எண்ணத்தையும்** கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். **(இது அந்திகிறிஸ்துவின் ஆவிகளுடனான யுத்தம்)**

ஆகவே, **இங்கு யுத்தத்தின் வடிவம் மட்டுமே மாறியுள்ளது. யுத்தம் யாருடனானது என்பதிலே மாற்றமில்லை.** என்பதைக் கண்டு கொள்ளும் போதுதான்,

முத்திரிக்கப்பட்ட கைகளுக்குள் மூடிக்கிடக்கும் சத்தியத்தைச் சாத்தான் கண்டு கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எழுப்பிய இராட்சதர்களையும்.
- வஞ்சித்த விக்கிரகங்களையும்.
- விரல்களில் முத்திரைகாட்டி கலாச்சாரப் போர்வைக்குள் மூடிக் கிடக்கும் விக்கிரகக்கலையையும் இனம் கணலாம்.

❖ **சர்வாயுதவர்க்கம்** என்பது **போராயுதமே.**

- **தேவனை அறியாதவர்கள்,** அறிந்து கொள்ளும்படியான முத்திரிக் கப்பட்ட கைகளுக்குள் **மூடிக்கிடக்கும் கட்டளைகள்.**
- **இஸ்ரவேலருக்குத்** தேவகரத்தால் **எழுதிக்கொடுக்கப்பட்ட கட்டளைகள்.**
- புது உடன்படிக்குரிய காலத்திலே **தேவனை அறிந்தவர்களுக்கு இரண்டு கட்டளைகளாய்** இலகுவானசுமையாயிற்று.

❖ **பத்துக்கட்டளைகள்** என்பது இரண்டு கட்டளைகளுக்குள் முழுமை பெற்ற சத்தியமாயிற்று. (மத்தேயு 22:36- 40) (மாற்கு 12:28-31)

❖ ஒருவரை ஒருவர் அன்பு கூருவதே புதிய கட்டளையாகும். (யோவான் 13:34)

❖ **பத்துவிரல்களும் இரண்டு கரங்களுக்குள் அடங்கியுள்ளது என்பதின் அர்த்தம் புரியும்.**

❖ பத்து விரல்கள் என்பது பத்து கட்டளைகளையும், இரண்டு கரங்கள் என்பது அன்பின் பிரமாணம் என்பதை உணரும் போது இரண்டு கரங்களும் (ஆயுதம் ஏந்த அல்ல) அன்பின் வெளிப்பாடு.

**அன்பினால் கட்டி அணை!**
**அன்பினால் கட்டி இழு!!**
**அன்பினால் கரம் கொடு!!!**

- **இதுவே அன்பின் பிரமாணம்.**
- **இதுவே அன்பின் வழி.**
- **இதுவே அன்பின் மார்க்கம்.**

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ⑧

# ஆவியின் இரகசியம் – பகுதி 2

**(நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயிருக்கிறது** (யோவான் 6 : 63) என்பதிலே,

**ஆவி** என்பது **வார்த்தை** என்னும் **சாவிவார்த்தையைக் கொண்டு** திறக்கப்பட்ட 12 வேதாகம ஆதாரங்கள் **நீர்க்கால்கள்** நூலில் காணலாம்,

பகுதி 2ம் **ஆவி** என்பது **வார்த்தை** என்னும் ஆதாரத்துடனே தொடர்கிறது

**(1) புத்திரசுவிகாரத்தின் ஆவி. (ரோமர் 8 : 15) (கலாத்தியர் 4 : 6)**

(i) **புத்திரசுவிகாரம்** என்பது புத்திரனல்லாது இருந்த ஒருவரை புத்திரராக குடும்பத்திற்குள் அல்லது வீட்டிற்குள் கொண்டுவந்து குடும்பத் தலைவனை **"அப்பா"** என்று கூப்பிடும் உரிமையைக் கொடுப்பது ஆகும். குடும்பத்திற்குள் இல்லாது வெளியே நிற்கும் போது **அப்பா** என்று அழைக்க முடியாது அல்லது அதற்கான உரிமை இல்லை என்பது சாதாரண அர்த்தமாகும்.

(ii) யூதர்கள் தேவனை அழைக்கும்போது ஆபிரகாமின்தேவன், யாக்கோபின்தேவன், ஈசாக்கின்தேவன் என்று அழைத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பிதாக்களின் பெயருடன் உறவைச் சொல்லி அழைப்பதே அவர்களுக்கு தேவனுடனான உறவாக இருந்தது.

ஆனால் இயேசு **தேவனைத் தமது** சொந்தப்பிதா என்று கூறியபோது (யோவான் 5 : 18) **தம்மைத்தேவனுக்குச் சமமாக்கினார்** என்று யூதர்கள் இவரைக் கொலை செய்யும்படி வகைதேடினார்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரது **வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளும் போது** புறஜாதிகளாகிய நாமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக **அப்பா! பிதாவே!** என்று கூப்பிடத் தக்க பிள்ளைகளாகின்றோம். இதனையே கலாத்தியர் 4 : 6ல் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியால் அப்பா! பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் **தமது குமாரனுடைய ஆவியை** உங்கள் **இருதயங்களில்** அனுப்பினார் என்று பவுல் எழுதியுள்ளார்.

குமாரனுடைய **ஆவி** என்பது **கிறிஸ்துவுடைய ஆவி** ஆகும். **கிறிஸ்துவுடைய ஆவி** என்பது **கிறிஸ்துவுடைய வார்தைகளைக்** குறிக்கும். (யோவான் 6 : 63)

❖ இயேசுவுடைய **வார்த்தைகள் இருதயத்திற்குள்** நிரம்பும்போதுதான் **அப்பா! பிதாவே! என்று அழைக்க முடியும்** என்பதே வேதாகமத்தின் ஆதாரமும் **ஆவிக்குரிய இரகசியமும்** ஆகும்.

(iii) எபிரேய மொழியின் முதல் எழுத்தாகிய **ஆலேப்** என்பதும், இரண்டாவது எழுத்தாகிய **பெத்** என்ற எழுத்தும் சேர்ந்துதான் **அப்பா!** என்னும் சொல்லாகின்றது.
**ஆலேப்** என்ற எழுத்தின் பொருள் **தலைவன்.**
**பெத்** என்ற எழுத்தின் பொருள் **வீடு.**

ஆகவே, **அப்பா** என்ற சொல்லின் பொருள் **வீட்டின் தலைவன்** என்பதாகும்.

(எபிரேய எழுத்துக்கள் 22 இன்பெயரும் உருவும் சங்கீதம் 119ல் வருகின்றது)

புறஜாதியாராகிய நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு சபையாகிய வீட்டிற்குள் வரும்போது இரட்சிக்கப் பட்ட விசுவாசிகள் சகோதர சகோதரிகளாகவும்,
**இயேசுகிறிஸ்து சபையின் தலைவராகவும் இருக்கிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் **அப்பா!** என்று அழைக்கும் போது **இயேசுவை குடும்பத் தலைவராகவும், பிதாவே!** என்று அழைக்கும் போது **அவரை பரலோகத்தின் தேவனாகவும்**, அறிக்கை செய்கிறோம் என்பதே **இரகசிய அர்த்தமாகும்.**

**புத்திரசுவிகாரத்தின் ஆவிஎன்பது.**
**வார்த்தையாக இருதயத்தில் நிரம்புவது.**
**இயேசுவுடனான உறவை வெளிப்படுத்துவது.**
**பிதாவுடனான உரிமையை அறிக்கைசெய்வது.**

## (2) ஞானத்தின் ஆவி (யாத்திராகமம் 28 : 3)

இங்கு **ஞானம்** என்னும் போது மனுஷஞானம் உலகஞானம் என்பவற்றில் இருந்து வேறுபட்டு **தேவஞானம்** என்பதைக் குறிக்கின்றது.

இத் **தேவஞானம்** என்பது இறங்குகிறது என்றும் வடிகிறது என்றும் குறியீட்டுடன் வந்தாலும் மேலிருந்து இறங்குதல் என்னும் பொருளில் பரத்திலிருந்து கொடுக்கப்படுவது என்னும் ஞானஅர்த்தமுள்ளது.

**ஆகவே தேவஞானம் என்பது பரத்திலிருந்து இறங்குகிறதாயிருக்கிறது.** (யாக்கோபு 3 : 17)

❖ **தேவனுடைய வார்த்தையினாலே ஞானம் உண்டாகும் என்ற மறை பொருளில், ஞானத்தின் ஆவி** என்பதும் **தேவவார்த்தையையே** குறிக்கின்றது.

(i) **பழைய ஏற்பாட்டுக் காலத்தில்.**
தேவனுடைய ஊழியங்களுக்காக **பிரிக்கப்பட்டு, அவ்ஊழியங்களைச் செய்வதற்கான ஞானம் உண்டாகும்படிக்கு பிரித்தெடுக்கப்பட்ட வர்கள் மீது** தேவனாலே இருதயத்தில் நிரப்பப்படுவதாக வேதாகமத்தில் காணலாம். (யாத் 28:3) (யாத்தி 31:5) (உபாகமம் 34:9)
**தேவ ஆவியினால் நிரப்பப்படும்போது ஞானம் உண்டாகும்.** (யாத்திராகமம் 35 : 35)

(ii) **புதியஏற்பாட்டுக் காலத்தில்.**
**எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ** அவர்களுக்குக் **கிறிஸ்துவே தேவஞானம்** (1 கொரிந்தியர் 1 :24) (1 கொரிந்தியர் 1 : 31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுகிறிஸ்து வார்த்தையாயிருக்கிறார். அவருடைய **வார்த்தையே நமக்கு** தேவஞானம் தேவபெலன் ஆகும்.

❖ **இயேசுவுடைய வார்த்தையே ஆவியாயிருக்கின்றது என்பதே சாவிவார்த்தை.**

❖ **ஆவியினால் நிரப்பப்படும்போதே** ஆவியானவர் வரங்களைக்கிரியை செய்வார் என்பதும்:

**ஆவியானவர் தமது சித்தத்தின்படி வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார் என்பதுமே வேதசத்தியம்** *(ஏசாயா 11 : 2) (யாத்திராகமம் 35 : 33- 35) (1 கொரிந்தியர் 12 : 7- 12)*

அந்த **ஆவியினால் ஒருவனுக்கு ஞானத்தைப் போதிக்கும் வசனமும்....** *(1 கொரி 12 : 8)* என்பது **வரமாக** பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. இது வார்த்தையினால் நிரம்பும்போதுதான் என்பதை உணரக்கடவோம்.

ஆகவே ஞானத்தின் ஆவியென்பது.

- பரத்திலிருந்து இறங்கிவருவது.
- இருதயத்தில் நிரப்பப்படுவது.
- வரங்களாக வெளிப்பது.

## (3) அந்திகிறிஸ்துவின் ஆவி (1 யோவான் 4 : 3)

- கிறிஸ்துவுக்கு எதிரானவன் அந்திகிறிஸ்து என்பதினால் அந்தி கிறிஸ்துவின் ஆவி என்பது இயேசு கிறிஸ்துவுடைய வார்த்தைக்கு எதிரானது என்பதே அர்த்தமாகும்.

- கிறிஸ்துவுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டவர்க்குள்ளே அவனது கிரியை நடப்பிக்கப்படுகிறது.

- இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குமுன் தேவனுடைய தீர்க்கதரிசிகள் மூலம் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்டு, காலம் நிறைவேறிய போது மாமிசத்தில் வெளிப்பட்டார்.

  **அவ்வாறே,** அந்திகிறிஸ்துவும் வெளிப்படுவதற்காக கள்ளத் தீர்க்க தரிசிகள் மூலமாக கிறிஸ்துவை மறுதலிக்கும் **அந்திகிறிஸ்துவின் ஆவியானது,** கள்ளஉபதேசங்களாகவும், பலவிதபோதனைகளாலும், துர்உபதேசங்களாகவும் கிரியை செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே 1 யோவான் 4 : 1 ன்படி, **எல்லா ஆவிகளையும் நம்பாமல்,** அந்த ஆவிகள் தேவனால் உண்டானவையோ என்று சோதித் தறியுங்கள். என்பதே வேதாகமத்து ஆலோசனையாகும்.

**வேதாகமத்தின் சத்தியம் தெரியாவிட்டால்,**

- விசுவாசிகள் தொலைந்து போவார்கள்.
- போதகர்கள் வெட்கப்பட்டுப் போவார்கள்.
- விசுவாசம் காற்றால்மோதி இடம் பெயர்ந்துபோகும்.

**அந்திகிறிஸ்துவின் ஆவி சபைகளுக்குள்ளே கிரியைசெய்யும்.**

- சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை கிரியைசெய்யும்.
- வேதம் சொல்லாததை **வெறுக்காவிட்டால்** கிரியை செய்யும்.
- கன்மலையில் **அஸ்திபாரம் போடாதபோது** கிரியைசெய்யும்.

"இயேசுவின் வார்த்தைக்கு எதிரானதே அந்திகிறிஸ்துவின் வார்த்தை" அதுவே அந்திகிறிஸ்துவின் ஆவி.

## (4) வஞ்சகத்தின் ஆவி (1 திமோத்தேயு 4 : 1)

**வஞ்சகத்தின் ஆவி** என்பது **வஞ்சகமான வார்த்தைகள்** அல்லது **வஞ்சகமான உபதேசம்** ஆகும். ஏனெனில் **வஞ்சகத்தின் ஆவிக்குச் செவிகொடுக்கும்** போது விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள் என்பதன் மூலம் **வஞ்சகத்தின் ஆவி** என்பது வார்த்தை என்பதைக் குறிக்கும் என்பது தெளிவாகின்றது.

இதனை 1திமோத்தேயு 4:1
- **மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யரின் உபதேசம்.**
- **மனதை வஞ்சிக்கும் மாயம்.**
- **பிசாசின் உபதேசம்.**

என்று அடையாளம் காட்டுகின்றது. வஞ்சகத்தின் ஆவியை மூன்று காரியங்களின் மூலம் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

(i) **ஏதேனில் - வஞ்சகத்தின் ஆவி.**

ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் ஏதேன்தோட்டத்தில் சர்ப்பத்திற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செவிகொடுத்து** தேவன் விலக்கியதை ஆதாமும் ஏவாளும் புசித்த போது, ஸ்திரியானவள் **சர்ப்பம் என்னை வஞ்சித்தது** என்றாள்.

ஆகவே, **வஞ்சகம் என்பது**
- தேவகட்டளையை மீறப்பண்ணும்.
- இருதயத்தில் மயக்கம் உண்டாக்கும்.
- தேவசாயலை இழக்கப்பண்ணும்.

(ii) **உலகத்தில் - வஞ்சகத்தின் ஆவி.**

❖ நாம் இரட்சிக்கப்படும் படிக்கு, **வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே.**

அவருடைய நாமமே (இயேசுகிறிஸ்து) அல்லாமல் **வேறொருநாமம்,** கட்டளையிடப்படவில்லை. (அப்போஸ்தலர் 4 : 12)
**இயேசுகிறிஸ்து மூலமே இரட்சிப்பு.**

❖ தங்கள் வஸ்திரங்களை **ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில்** தோய்த்து வெளுத்தவர்கள் எண்ணிமுடியாத திரள் கூட்டமாய் மீட்கப் பட்டு பரலோகத்தில் ஆர்ப்பரித்தார்கள் (வெளிப்படுத்தல் 7 : 9-17)
**இயேசுவின் இரத்தினால் மீட்பு**

❖ **ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில்** பெயரெழுதப்பட்டவர்கள் மாத்திரம் மணவாட்டியாகிய மகிமையடைந்த எருசலேமுக்குள் பிரவேசிக்கமுடியும். (வெளிப்படுத்தல் 21 : 27)
**இயேசுகிறிஸ்து மூலம் மணவாட்டி**

இத்தகைய வேத ஆதாரங்கள் இருந்தபோதிலும் உலகத்தில் கிறிஸ்த வத்திற்கு எதிராகவும், உலகத்திற்குள் ஊழியம் என்றபெயரில் **சாட்சிகள்** என்றகூட்டம் **சத்தியத்திற்கு எதிரான வஞ்சிக்கும் ஆவியாக** செயல்படுகிறது. (1யோவான் 4 : 6)

(iii) **சபைகளுக்குள் - வஞ்சகத்தின் ஆவி**

❖ பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கின்ற **செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும்.**
பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காத படிக்கும்,** (உபாகமம் 4 : 18) (உபாகமம் 5 : 8)

அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், **பறவைகள்,** மிருகங்கள், ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய **ரூபங்களுக்கு ஒப்பாக** மாற்றினார்கள். (ரோமர் 1 : 23)

வேதவாக்கியமானது **தெளிவான சத்தியத்தை** நமக்கு அறியத்தரும் போதும், **தேவனுடைய வார்த்தைக்குச் செவியை விலக்கி. ஆவியான வருக்கு புறாவின் உருவை உண்டாக்கி,** கம்பியூட்டர் தொழில்நுட் பத்தின் மூலம் **சித்திரவிநோதம்** செய்யும் பலசபைகள் இருப்பதைப் பலர் அறிவார்கள். **தேவகட்டளை அசட்டை பண்ணப்படுகிறதே.**

தேவன் மனிதனை உண்டாக்கினார் என்பதே சத்தியம் இதுவே உண்மை மனிதன் தேவனை உண்டாக்குவது அல்ல. மனிதன் உண்டாக்கி விடுவான் என்பதனாலேயே **உண்டாக்கக்கூடாது** என்பது **தேவகட்டளையாயிற்று.**

**உண்டாக்கும் உருவம் விக்கிரகமாகி வஞ்சிக்கிறதற்கு ஏதுவாகிவிடும்** என்பதால் தேவனை அறிந்தவர்கள் அவரை இருக்கிறவண்ணமாகவே அறியவேண்டும். என்பதனாலேயே **உண்டாக்கக்கூடாது என்பது** தேவகட்டளையாயிற்று.

**வஞ்சிக்கும் ஆவிக்கு இடம்கொடுத்த தேவசபையே! தேவஊழியனே!**

- தேவனுடைய சத்தியம் பொய்யாக மாறியதை அறிந்துகொள்.
- தேவன் அசுத்தத்திற்கு உன்னை ஒப்புக்கொடுத்ததை எண்ணிக்கொள்.
- தேவன் உன்னை விட்டுத்தூரமாய்ப் போனதை உணர்ந்துகொள்.

- **தேவனுடைய பார்வையிலே இதுமிகுந்த அருவருப்பு.**
- **அருவருப்பு தேவனைதூரமாய்ப் போகப்பண்ணும்.**

(ஆதாரம்) (எசேக்கியேல் 8 : 6) (எசேக்கியேல் 8 : 10)

## தேவன் விலக்கினதைப் புசியாதிருப்போம்!

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வரிசை 1 : நீர்க்கால்கள்

| குறைவுகள் (எழுத்துப் பிழைகள்) | - | திருத்தம். |
|---|---|---|
| 1. நல்ல மேய்ப்பவனுக்கு | - பக் iii | நல்லமேய்ப்பனுக்கு |
| 2. ஏசாயா 30:35 | - பக் 2 | ஏசாயா 30:33 |
| 3. யோபு 3:33 | - பக் 6 | யோபு 31 : 33 |
| 4. மத்தேயு 12:36 | - பக் 12 | மத்தேயு 12:34 |
| 5. 1கொரிந்தியர் 6:14 | - பக் 20 | 2 கொரிந்தியர் 6:14 |
| 6. வெளிப்படுத்தல் 9:12 | - பக் 29 | வெளிப்படுத்தல் 9:13 |
| 7. திருவசனமாகிய ஞானப்பால் | - பக் 55 | திருவசனமாகிய **களங்க மில்லாத** ஞானம்பால். |

**நீர்க்கால்கள்** நூலின் குறைவுகளிலும் நிறைவுகளை எண்ணி, அடுத்த நூல் வெளியிட உற்சாகப்படுத்தியும், ஜெபங்களில் நினைவுகூர்ந்தும், கிறிஸ்துவுக்குள் பெலனடைந்து வர **ஊன்றுகோலாய்** நின்ற நல்ல உள்ளங்களுக்கு கிறிஸ்துவுக்குள் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகத் தேவைகளுக்கு : (புத்தகம் விற்பனைக்கு அல்ல)

Romison Christion Shop
No. 87, Jampettah Street,
Colombo - 13
T.P : 011 2434094 / 077 4708049

Pastor. இன்பராஜ்
Good News Prayer Church
கோட்டைக்கல்லாறு - 2,
கல்லாறு. (கி.மா)
T.P: 077 6351595

Pastor. A. கிறிஸ்டோபர்
A.O.G. Church
மெராயா கொலனி
லிந்துல.
ஹற்றன் வழி
T.P: 052 5674603 / 077 2161401

Bro. M. ஜெயராஜ்
54/14, Music Lane
தாமரைக்கேணி,
மட்டக்களப்பு.
T.P: 071 6252946

Pastor. A.I. Jesunesan
(Living God Church)
34/14, Vanniah's Lane,
Batticaloa.
T.P : 077 5809479

Bro. Boni
14 - சின்ன உப்போடை
மட்டக்களப்பு.
T.P: 077 3075350

Bro. Beni
179, Downs Barn
Boulevarel
MILTON KEYNES
U.K.
T.P: 00447850378568


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [illegible]

Pastor A.T. Jeevanesan
(Living God Church)
34/14, Vanniah's Lane,
[illegible]
TP : 077 5809479

Bro. Beni
[illegible]
[illegible]
TP: 077 3075350

Bro. Beni
179, Downs Barn
Boulevard
MILTON KEYNES
U.K
TP: 00447850378568

Dominion Christian Shop
No: 87, Jampettah Street,
Colombo - 13
TP : 011 2434094 / 077 4708049

Pastor: [illegible]
Good News Prayer Church
[illegible]
[illegible]
TP: 077 6351595

Pastor A. [illegible]
A.O.G. Church
[illegible]
[illegible]
[illegible]
TP: 052 5674603 / 077 2161401

Bro. M. [illegible]
54/14, Music Lane
[illegible]
[illegible]
TP: 071 6252946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கள் இடறும் போது
நம் நம்பிக்கை

தளர்வுறும் போது
நம் பெலன்

சத்துருக்களிடமிருந்து
நம் பாதுகாப்பு

அசுத்தத்தை மூடிடும்
நம் பரிசுத்தம்

மேட்டிமையை சிறைப்படுத்தும்
நம் போராயுதம்

பரதேசியாய் வாழும்
நம் அடையாளம்

சோதனைகளை ஜெயிக்கும்
நம் ஊன்றுகோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org